

# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !
அசத்தியம் அழிந்து விட்டது !
நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

February 2022 பிப்ரவரி 2022

Volume - 13, Issue - 12

Retail Selling Price 20


# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

ஜமாலிய்யா அஸ்ஸையித்

யாஸீன் மௌலானா (ரலி)

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 240/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 1800 /- |

**சந்தா தொகை அனுப்ப முகவரி மாற்றம் மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 99437 86269 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 750 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 7000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 400 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 300 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 3000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்


**வெளியிடுவோர்**
**அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை**
பாகிரா காம்ப்ளக்ஸ் 74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி
**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்**
229/ 4, மீரா காம்ப்ளக்ஸ், மேற்கு ரத வீதி,
ஃபயர் சர்வீஸ் எதிரில், திண்டுக்கல் - 624 001.
**CELL : 99445 76165**
**Website:www.emsabai.org**
**email: aalimpulavar07 @ gmail.com**
**email: j.mdrahmathulla@yahoo.com**


# மறை ஞானப் பேழை


**ஜமாதுல் ஆகிர்-ரஜப்**

**பிப்ரவரி 2022**
**Volume - 13 Issue -12**


## பேழைக்குள்......


*ஜமாலிய்யா தோட்டத்தில்.....*
*திருமறைப் பக்கம்.*
*ஹதீஸ் பக்கம்.*
*சபைச் செய்திகள்.*
*அமுத மொழிகள்.*
*அறபு பைத்து*
*ரஜபு மாதமும் புனித மிஉராஜும்*
*மிஉராஜ் துஆ*
*ஹள்ரத் நிஜாமுத்தீன் அவ்லியா.*
*இப்னு தைமிய்யா....*
*தொப்புள் கொடி மகிமை!*
*கல்வத்து நாயகம் (ரலி)*
*எங்கே பிலால் (ரலி)?*
*அரைக்காசாயினும்...*
*குடியரசு!*
*மற்றும் பல்சுவை செய்திகள்.*

# தனியே – தள்ளி நில்லுங்கள்!

இறை நேசர் ஒருவர் குர்ஆன் ஷரீப் ஓதும் போது, யாஸீன் ஸூராவில் வரும் “ வம்தாஜுல் யவ்ம அய்யுஹல் முஜ்ரிமூன் ” (குற்றவாளிகளெல்லாம் இன்று தனியே பிரிந்து நில்லுங்கள்) எனும் ஆயத்தை ஓதும்போதெல்லாம் தேம்பித் தேம்பி அழுவார்களாம்.

ஏன் இப்படி அழுகின்றீர்கள்? என அன்பர் ஒருவர் கேட்டபோது, நாளை மறுமையில் “ குற்றவாளிகளெல்லாம் இன்று தனியே பிரிந்து நில்லுங்கள் ” என இறைக்கட்டளைப்படி வானவர்கள் ஆணையிடும்போது, நான் நல்லவர்கள் கூட்டத்தில் நிற்பேனா? அல்லது பாவிகளின் கூட்டத்தில் நிற்க நேருமா? என நினைத்தால் என் நெஞ்சம் நடுங்குகின்றது; கண்ணீர் பீறிடுகின்றது! என்று கூறினார்களாம்.

உண்மைதான்; உலகில் வாழும்போது நல்லவர்கள், கெட்டவர்கள், அனைவரும் ஒன்றாகத்தான் வாழ நேர்கிறது. தூயவர்களா? தீயவர்களா? எனப் பிரித்துப் பார்க்க முடிவதில்லை.

சந்தைக்கு விற்பனைக்காக வரும் பழக்கூடைகள் ஒன்றாகத்தான் வந்து இறங்குகின்றன. ஆனால் வியாபாரி, கூடையைப் பிரிக்கும்போது நல்லதைத் தனியாகவும் கெட்டதைத் தனியாகவும் பிரித்து வாங்குகிறான்.

இண்டர்வியூ ஹாலில் வேலைதேடி வந்த அனைவரும் ஒன்றாகத்தான் உட்கார்ந்து காத்திருக்கின்றனர்; ஆனால், முடிவில் ஒரு சிலரே தேர்வாகி மகிழ்ச்சியுடன் திரும்புகின்றனர். ரயிலில் எத்தனை பேர் விரும்பி ஏறினாலும் பயணச்சீட்டு இல்லாதவர் இடைவழியில் இறக்கிவிடப்படுவார்.

இதே போலத்தான், மறுமை நாளில்– மஹ்ஷர் வெளியில் – மனிதர்கள், கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று, “இன்று நம் நிலை என்னவாகுமோ? நமக்கு நமது பட்டோலை வலது கையில் கொடுக்கப்படுமா? அல்லது இடது கையில் வீசி எறியப்படுமா?” எனத் தவித்திருக்கும்போது, வானவர்கள் முன் வந்து, “ நல்லடியார்களே வாருங்கள்! ” என நல்லவர்களை வரவேற்றுத் தனியே அழைத்துச் செல்ல, பாவிகளாகப் புறக்கணிக்கப்பட்டவர்களின் நிலைமை என்னவாகும்? நினைத்தால் நெஞ்சம் பதறுகின்றது. இதிலிருந்து தப்புவதற்கு வழி என்ன?

நாம், உலகில் வாழும்போது, பாபங்களே! தனியாகப் போய்விடுங்கள்; என் அருகிலும் வாராதீர்! என பாபங்களைத் தனியாக நிறுத்திவைத்தலே சிறந்த வழி!

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**
**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**
**ஜமாலிய்யா**
**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**
**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



நாம் 1966ஆம் ஆண்டிலிருந்து இங்கு வந்து கொண்டிருக்கிறோம்.

எமது முரீதுகள் தவ்ஹீதை எந்த அளவு விளங்கியிருக்கிறார்கள் என்பதைவிட அவர்களின் நடை, உடை, பாவனைகள் எவ்வாறுள்ளன? அவர்களின் அன்றாட பழக்க வழக்கங்கள் எவ்வாறு உள்ளன? என்பனவற்றைத்தான் அன்று முதல் இன்று வரை கண்காணித்து வருகிறோம்.

– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –

# ஜமாலிய்யாத் தோட்டத்தில்

யாவையும் ஒரே பேரினம். மனமோ இவ்வினத்தைப் பிரிக்கின்றது. சொற்களும் நேரிலா வினைகளும் இப்பேரினத்தைக் கூறு போடுகின்றன. ஆயின், அவை மட்டுமோ? இனத்துக்கொரு சொல்லென மானிட இனம் பிரித்துவைத்துத் தெய்வத்தையும் பிரித்துத் தமக்கொரு தெய்வமென அதனையுஞ் சிதைத்து விடுகின்றது; சின்னபின்னப் படுத்துகின்றது; சித்திரவதை செய்கின்றது. என்னே பரிதாபம். மானிட இனம் இவ்வணமே தன்னையும் பிரித்துக் கூறுபடுத்தி, மதத்துவேசம், மத இனவேறுபாடுகள் கொண்டு தானே தன்னையுஞ் சித்திரவதை செய்து கொள்கின்றது. எல்லாம் நாமேயாயின் எல்லாம் நானேயாயின் ஏனோ இப்பிரிவு; இத்துவேசம்? எல்லாம் ஓருடலென்க.

கடவுளெனவும் தெய்வமெனவும் சிவமெனவும் மாலெனவும் முருகனெனவும் “ரஹ்மான்” எனவும் “ரஹீம்” எனவும் “அல்லாஹ்” எனவும் கோட் **(GOD)** எனவும் மற்றும் பலப் பெயர்கள் கொண்டு அழைக்கப்படுவனவெல்லாம் ஓரிறையின் பல திறப்பட்ட பலத்திருப் பெயர்களென்க. இவற்றின் கருத்தினை நன் குணரல் வேண்டற் பாற்று. அதிற் சிந்தனையைப் பெருக்கிடல் எழிற் செயலென்பாம். தமிழ்ச் சொற்களைத் தெய்வத் தினுக்குப் பிரயோகித்தலினிமித்தம் முஸ்லிம் இந்துவாகின்றிலன். ஆங்கில மொழிகளை உபயோகித்தலி னிமித்தம் தமிழன் ஆங்கிலேயனாகின்றிலன். இன்னணமே தமிழ், ஆங்கில, அறபு முதலாம் ஏனை மொழிகளை உபயோகித்தலினிமித்தம் மதமாற்றங்கள் ஏற்படப் போவதின்று என்க.

உண்மையை விளங்கிக் கொள்ள மொழிப்பறிமாறல் மிக மிக முக்கியமென்க.நான் அன்றேல் யான் எனின் அன்றேல் நாமோ யாமோ வெனின் இவையாவும் தனிமானிடன் ஒருவனையோ பலரையோ குறிப்பிடுவன அன்றென வறிக. யானோ யாமோ வென்பன,பரிபூரணமாய் இடையின்றி விராவிக்கலந்த மானிடனான ஞானி ஒருவர் தன்னின் முழுமை கழறி மற்றையவருக்கு பொருண்மைத் தெளிவு கிடத்தி ஒல்லும் வகையானே உள்ளத்துள் கருக்கொள்ள விருத்தும் செம்மொழிகளென்பதனை கூர்த்த மதியார் தெளித்துக் கொள்வர்.

*(இறையருட்பா நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்)*

கொய்த மலர் கொய்த மலர்

# அல்லாஹ் அருளுகிறான்.



எவர் தாம் செய்த (சொற்பமான) தைப் பற்றி மகிழ்ச்சி கொண்டும், தாம் செய்யாததை (செய்ததாகக் காட்டிக்) கொண்டு புகழப்படவேண்டும் என விரும்புகிறார்களோ அவர்கள் வேதனையிலிருந்து வெற்றியடைந்துவிட்டார்கள் என (நபியே!) நீங்கள் ஒருபோதும் எண்ணாதீர்கள். அவர்களுக்குத் துன்பம் தரும் வேதனையுண்டு. *(அல் குர்ஆன் 3:188)*

வானங்கள் பூமியிலுள்ள அனைத்தும் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்கின்றன. அவன் (அனைவரையும்) மிகைத்தவனும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

தவிர வேதம் கொடுக்கப்பட்டோரிடம் அவர்கள் அதை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். அதை மறைக்கக் கூடாது என்று அல்லாஹ் உறுதி மொழி வாங்கியதை (அம்மக்களுக்கு நபியே! நீங்கள் நினைவுபடுத்துங்கள்) அப்பால் அவர்கள் அதனைத் தங்கள் முதுகுக்குப்பின்னால் எறிந்துவிட்டு, அதற்குப் (பகரமாக) சொற்பக் கிரயத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் இவ்வாறு வாங்கிக்கொண்டது மிகக் கெட்டதாகும். *(அல் குர்ஆன் 3:187)*

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நம்முடைய தூதருடன் இரகசியம் பேச விரும்பினால் உங்களுடைய ரகசியப் பேச்சுக்கு) முன்னர் (ஏழைகளுக்கு) ஏதேனும் தர்மம் செய்து விடுங்கள். இது உங்களுக்கு நன்மையும் பரிசுத்தத்தன்மையும் ஆகும். (தர்மம் செய்ய எதையும்) பெற்றிருக்கவில்லையானால் (அதைப்பற்றி) உங்கள் மீது குற்றம் இல்லை. நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவனும் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான். *(அல் குர்ஆன் 58:12)*

அல்லாஹ் (தன் சட்டங்களை) உங்களின் மீது இலகுவாக்க விரும்புகிறான். ஏனெனில் மனிதன் பலவீனமானவனாகப் படைக்கப்பட்டிருக்கிறான். *(அத்தியாயம் 4- வசனம் 36)*

நன்மைகளை பூரண அழகுடன் செய்பவர்களை அல்லாஹ் விரும்புகிறான்.

*(அத்தியாயம் 2- வசனம் 195)*

தர்மம் கொடுத்து அல்லாஹ்வை அஞ்சி வாழ்ந்தவர். (தர்மத்துக்கு) அழகான கூலி உண்டு என்பதை உண்மைப்படுத்தியவர். விரைவில் அத்தகையவருக்கு எளிதான காரியத்தை நாம் மேலும் எளிதாக்குவோம். *(அத்தியாயம் 92- வசனம்5,6,7.)*

இறைவன் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக சிரமப்படுத்துவது இல்லை. *(அத்தியாயம் 4- வசனம் 286)*

அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? அறிவுடையோர்தாம் நல்லுரைகளை ஏற்கின்றார்கள். *(அத்தியாயம் 39- வசனம் 9)*

# அண்ணலார் அறிவுரை

ஹதீஸ் பக்கம்

இரு நேரங்களில் கேட்கப்படும் துஆக்கள் மறுக்கப்படுவதில்லை. ஒன்று; பாங்கு சொல்லும் நேரத்தில், மற்றொன்று கடுமையான யுத்தம் தொடங்கிய நேரத்தில் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியதாக ஹள்ரத் ஸஹ்ல் இப்னு ஸஉத் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள். *(நூல்: அபூதாவூது.)*

மூன்று வகை மனிதர்கள் மறுமை நாளில் கஸ்தூரி மேடையில் அமர்ந்திருப்பர். அவர்களைக் கண்டு முன்னோர் பின்னோர் யாவரும் பொறாமை கொள்வர். முதல் மனிதர்: இரவு பகலில் ஐந்து நேரத் தொழுகைக்கு பாங்குசொல்லி வந்தவர். இரண்டாம் வகை மனிதர்: மக்கள் திருப்தியுற்ற நிலையில் மக்களுக்குத் தொழ வைத்த இமாம். மூன்றாம் வகை மனிதர்: அல்லாஹ்வின் கடமைகளையும் நிறைவேற்றி தமது எஜமானனின் கடமைகளையும் நிறைவேற்றி வந்த அடிமை என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியதாக ஹள்ரத் ஸஹ்ல் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்.

*(நூல்: திர்மிதீ)*

நீங்கள் மூன்று பேர் இருக்கும்போது மூன்றாம் நபரை விட்டுவிட்டு இரண்டு பேர் மட்டும் இரகசியம் பேசவேண்டாம்.

*(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி).*

எனக்கு மூல நோய் இருந்தது. எவ்வாறு தொழுவது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டேன். நீர் நின்று தொழும்! இயலாவிட்டால் உட்கார்ந்து தொழும்! அதற்கும் இயலாவிட்டால் படுத்துக் கொண்டு தொழும் என்று கூறினார்கள். அறிவிப்பவர்: *(இம்ரான் பின் ஹுஸைன் (ரலி), நூல்: புகாரீ 1117.)*

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தங்களது துஆவில்…இறைவா! இயலாமையிலிருந்தும் சோம்பலிலிருந்தும் கோழைத்தனத்திலிருந்தும் முதுமையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். மேலும் மண்ணறையின் வேதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். வாழ்வின் சோதனையிலிருந்தும் இறப்பின் சோதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று கேட்கக் கூடியவர்களாக இருந்தார்கள். *(நூல்: முஸ்லிம்)*

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: காலணி அணியும்போது முதலில் வலது காலில் அணியுங்கள்; கழற்றும்போது இடது காலில் முதலில் கழற்றுங்கள். வலது காலே அணிவதில் முதலாவதாகவும் கழற்றுவதில் இறுதியாகவும் இருக்கட்டும். *அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரலி, நூல்: புகாரீ.*

# இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

சங்கைமிகு அஸ்ஸெய்யித் அலீ மௌலானா அல்ஹாதீ அவர்களின் மகனாரும், சங்கைமிகு குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்களின் மூத்த மருமகனாரும், சங்கைமிகு குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் உஜூத், ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் மச்சானும், சங்கைமிகு அஸ்ஸெய்யித் அலீ மௌலானா, (பூ மௌலானா) மற்றும் சங்கைமிகு அஸ்ஸெய்யிது யாஸீன் மௌலானா (சின்ன மௌலானா) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாகிய திருமுல்லைவாசல் சங்கைமிகு A. அஸ்ஸெய்யிது மஸ்ஊது மௌலானா அல்ஹாதீ அவர்கள் 11.1.2022 செவ்வாய் இரவு தாருல் ஃபனாவைவிட்டு தாருல் பகா அடைந்தார்கள். 12.1.2022 புதன்கிழமை அஸருக்குப்பின் திருமுல்லைவாசல் பள்ளிவாசல் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது.

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதுப்பிள்ளைகள் தமிழகத்தின் அனைத்து ஊர்களிலிருந்தும் வந்து அன்னாரின் ஜனாஸாவில் கலந்து கொண்டனர்.

சங்கைமிகு செய்குநாயகம் அவர்கள் மீது மிகுந்த பாசமும் பக்தியும் கொண்ட மஸ்ஊத் மௌலானா அவர்கள், திருமுல்லை வாசல் வரும் முரீதுப் பிள்ளைகளை அன்புடன் வரவேற்று உபசரிக்கும் உயர் பண்பு கொண்டவர்கள். ஸய்யிதுனா யாஸீன் நாயகம் (ரலி) அவர்களிடம், தாம் கண்ட உயர் பண்பு, மேன்மை, கராமத்து, அனுபவங்களை பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்வார்கள். திருமுல்லை கந்தூரி, சம்பை கந்தூரி, ஏகத்துவ மெய்ஞ்ஞானசபையின் மீலாதுவிழாக்கள், வாப்பா நாயகம் அவர்களின் உதயதின விழாக்களுக்குத் தலைமை தாங்கி அலங்கரித்ததும், முரீதுப்பிள்ளைகளில் இல்லத் திருமணங்களுக்கு வருகை தந்து துஆ செய்த நிகழ்வுகள் அனைத்தும் என்றும் மறக்க முடியாதன. ஆண்டுதோறும் இலங்கையில் நடைபெறும் மீலாது கந்தூரியில் மகிழ்வுடன் பங்கேற்று, அங்கு வருகை புரியும் ஆலிம்கள், சொற்பொழிவாளர்கள் அனைவரோடும் ஆனந்தமாக உரையாடியது நெஞ்சில் நீங்காமல் நிற்கிறது.

நெருங்கிய உறவினராக இருந்தபோதும் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதாக இருப்பதையே பெரும் பாக்கியமாகப் போற்றி, தங்களின் குடும்பத்தார், பிள்ளைச் செல்வங்களையும் அதே உணர்வுடன் வளர்த்திருப்பது எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

**யா அல்லாஹ்! சங்கைமிகு மஸ்ஊத் மௌலானா அவர்களின் மறுமை வாழ்வை இறையுடன் கலந்த இன்ப வாழ்வாக ஆக்கியருள்வாயாக! ஆமீன்!**

## திருக்குறள்

**உண்ணாது நோற்பர் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்**

உண்ணா நோன்பு இருக்கும் பெரியவர்களைவிடத் தம்மை இகழ்வோரின் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்பவரே மேலானவர் ஆவார்.

## தீன் குறள்

**சினப்பார் தமைப்போல் புவிக்குச் சுமையாய்க்**
**கனப்பார் எவரு மிலர்.**

இந்தப் பூமிக்குச் சுமையாக – வேண்டாதவராகக் கனப்பவர், சினம் கொள்பவரைப் போல் வேறு எவருமிலர்.

*– தத்துவக்கவிஞர். இ.பதுருத்தீன் –*

## இருமாதச் சிறப்பு தினங்கள்

ربيع ثان

**ஜமாதுல் ஆகிர்**

| பிறை | |
|---|---|
| 5 | மௌலானா ரூமி (ரஹ்) மறைவு |
| 2 | கம்பம் அம்பா நாயகம் கந்தூரி |
| 10 | நாகூர் ஷாஹூல் ஹமீது பாதுஷா (ரலி) கந்தூரி |
| 14 | இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) மறைவு |
| 17 | காயிதே மில்லத் (ரஹ்) மறைவு |
| 22 | அபூபக்ர் ஸித்தீக் (ரலி) மறைவு |

رجب

**ரஜப்**

| பிறை | |
|---|---|
| 1 | ஹஸன் பஸரீ (ரஹ்) மறைவு |
| | கல்வத்து நாயகம் (ரஹ்) மறைவு |
| 4 | இமாம் ஷாபிஈ (ரஹ்) மறைவு |
| 5 | மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்) மறைவு |
| 6 | க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரலி) மறைவு |
| 14 | தக்கலை பீர் அப்பா (ரலி) கந்தூரி |
| 15 | இமாம் ஜஃபர் ஸாதிக் (ரலி) ஷஹீது |
| | மதுக்கூர் ஷைகு ஃபரீத் வலீ (ரஹ்) கந்தூரி |
| 27 | புனித மிஃராஜ் இரவு |

**கோலத்திலுருவ பேதம்**
**கொண்டாலு மாதி போதம்**
**சாலத் தெளிந்த போது**
**சருவத்திற் சர்ச்சை யேது**

*(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்)*

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்



# அமுத மொழிகள்

## நல்ல முரீது..

♦ அந்தக் காலத்தில் கடும் வெய்யிலில் Air Condition என்றெல்லாம் இல்லாத காலத்தில் நோன்பு வைத்துக் கொண்டு ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், அழைத்த மாத்திரத்தில் போருக்குச் சென்றார்களே உடல், பொருள், ஆவி அனைத்தையும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்காக தத்தம் செய்து வீரமரணம் அடைந்தார்களே பெருமைமிக்க ஸஹாபாக்கள்.

அவர்களைப் போன்று அனைத்தையும் தத்தம் செய்யக்கூடிய, தியாகம் செய்யக் கூடியவர்கள் இன்று இருக்கிறார்களா?

ஸஹாபாக்கள் போன்று முழுமையாகத் தம்மை அர்ப்பணிக்கக் கூடிய முரீதுகள் இருக்கிறார்களா? கலீபாக்கள் இருக்கிறார்களா?

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கட்டளைக் கிணங்க, போருக்குச் சென்று வீரமரணமெய்திய தமது மைந்தனைப் பற்றி ஒரு தாய் கேட்கிறார்.

எனது மகனுக்கு வயிற்றில் குத்துப்பட்டிருந்ததா? அல்லது முதுகில் குத்துப் பட்டிருந்ததா? அதற்கு ஒருவர் கூறுகிறார்: வயிற்றில் தான். “அப்படியா? மகிழ்ச்சி.... எனது மகன் வீரனாகவே ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்காக அர்ப்பணமாகியிருக்கிறார்'' என அந்தத் தாய் கூறுகிறார்.

இன்னொரு அம்மையாரிடத்து, வழியில் ஒருவர்; உமது தந்தை இறந்து விட்டார் என்கிறார். இன்னொருவர் உமது கணவர் இறந்து விட்டார் என்கிறார். இன்னொருவர் உனதருமை மகனாரை எதிரிகள் வெட்டி வீழ்த்தி விட்டனர் எனக்

கூறுகிறார். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எப்படி இருக்கிறார்கள். அவர்கள் நலமா? என ஆவலோடு கேட்டு ஓடி உண்மை நிலவரம் தெரியும்வரை மனதில் கலவரத்தால் துவண்ட அவ்வீரப் பெண்மணியைப் போன்றவர்கள் இன்று இருக்கிறார்களா?

அவ்வாறான முரீதுகள், கலீபாக்கள் இன்று இருக்கிறார்களா? இல்லையே. உடலாலும், பொருளாலும், உயிராலும் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நேசிப்பவர்கள் தான் உண்மை முஸ்லிம்கள். அதுபோன்று, ஒரு ஷைகு ஒன்றைக் கூறினால், அதனை அப்படியே ஏற்றுச் செயல்பட வேண்டும்.

எப்படி ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு ஸஹாபாக்கள் வழிபட்டார்களோ அதேபோன்று ஷைகுக்கு முரீதுகள் வழிபடக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

♦ ஷைகிடம் அதிகமான அன்பு கொள்ள வேண்டும். (பனாபிஷ் ஷைக்) ஷைகிடம் இரண்டறக் கலத்தல் தான் தவ்ஹீதின் முதலாவது படியாகும். அதற்குப் பிறகு தான் ஹக்கில் இரண்டறக் கலப்பது.

எனவே, ஷைகிடத்தில் உரிய அன்பும் மரியாதையும் பயபக்தியும் இருந்தால்தான் முரீதின் வாழ்வில் சிறப்பு உண்டாகும்.

மேலும், ஆகிறா என்னும் மறுமை வாழ்வில் பெருமையான வாழ்வு அமைய (அடைய) வேண்டுமானால், அல்லாஹ்வை அறிந்து இருக்க வேண்டும்.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குப் பணிந்து வாழ வேண்டும். அந்த ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வழிவந்த ஷைகுமார்களிடம் மரியாதையோடும், பயபக்தியோடும் நடந்துகொள்ள வேண்டும்.

இவற்றிற்கு மாற்றமாக நடந்தால் அவர் அந்த ஷைகுக்கு உரியவர் அல்லர்.

ஷைகுடைய கூற்றுக்கு மாற்றமாக ஒரு முரீது நடந்தால், அதுவே பெரிய ஆபத்தாக அமைந்துவிடும். பல கஷ்டங்கள் வந்து சேரும்.

♦ “அல்லாஹுத்தஆலா ஜின்னையும், மனிதனையும் படைத்தது வணங்குவதற்காகவே’’ என்றால், நாம் பார்ப்பது, நாம் கேட்பது, நாம் உண்ணுவது மற்றும் நாம் எதைச் செய்தாலும் அதையே செய்கிறோம். அவனுடைய

கருத்தைக் கொண்டு அவனாகவே செய்கிறான் என்ற கருத்தின்படியே "வலாகின்னல்லாஹ ரமா" என இறைவன் கூறுகிறான்.

அதாவது, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மண்ணை எறிந்தபோது, "நபியே நீர் எறியவில்லை. நானே எறிந்தேன்" என்று அல்லாஹ் கூறுகிறான்.

உண்மையில், ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தான் எறிந்தார்கள். அப்படியிருக்கும்போது அல்லாஹ்வே எறிந்தான் என்றால் எப்படி? என்ற கேள்வி எழுகிறது.

எனவே, மனிதன் எதைச் செய்தாலும் அதை அல்லாஹ்வே செய்கிறான் என்பதுதான் கருத்து. அவன் நோக்கமில்லாமல், அவன் கருத்தில்லாமல் எதையும் யாரும் செய்ய முடியாது.

இங்கிருந்து அங்கு போக வேண்டும் என நாம் நினைத்தால், அங்கு போக முடியாது. அல்லாஹுத்தஆலா அதை நினைத்தால், அவனுடைய அணுக்கள் ஒன்று சேர்ந்தால் அதனுடன் நாம் நினைத்திருக்கக்கூடிய அணுக்கள் சேர்ந்தால் தான் நாம் அசைய முடியும், போக முடியும்.

அவ்வாறில்லாவிட்டால் நாம் போக முடியாது. பார்க்க முடியாது. பேச முடியாது. சாப்பிட முடியாது. மூச்சுவிட முடியாது.

அதனால்தான் நாம் கூறுகிறோம். அல்லாஹ் மனிதனைப் படைத்தது வணங்குவதற்காகத் தானன்றி வேறெதற்குமில்லை. நாம் சாப்பிடும்போதும், நாம் நினைக்கும்போதும், தூங்கும்போதும், அந்தப் பரிபூரணமான கருத்தைக் கொள்ள வேண்டும்.

உண்ணும்போது உறங்கும்போது அந்தப் பரிபூரண கருத்தை கைக் கொள்ளும்போது அந்த பரிபூரண "தஜல்லி" நம்மிலே வெளியாகும்.

எனவே. நாம் எதைச் செய்தாலும் அவன் செய்ததாகவே நினைக்க வேண்டும். அது நாளடைவில் ஹக்குச் செய்ததாகவே மாறிவிடும். நமது முழுத் தோற்றமும், உருவமும் எண்ணமும் அதுவாகவே மாறிவிடும்.

***இஸ்லாத்தில் சூபிஸமே இல்லை எனச் சிலர் கூற என்ன காரணம்?***

இப்போது இஸ்லாத்தின் நிலை மிகக் கைசேதமாக இருக்கின்றது. இஸ்லாத்தின் அடிப்படையையே தகர்க்கக் கூடியவர்கள் கிளம்பியுள்ளார்கள்.

இஸ்லாத்தில் சூஃபியத்தே கிடையாது எனக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறெல்லாம் பிறர் கூறுவதற்கு என்ன காரணம்?

ஒழுங்கற்ற, முறையற்ற வழியில் சில ஷைகுமார்களும் முரீத்களும் நடந்ததாலேயே தான் சூபிஸத்தைக் குறை கூறுகிறார்கள்.

அவ்வாறான ஷைகுமார்கள் குறைகளைத் தாங்களும் நீக்கி, தம் முரீத்களையும் குற்றங் குறைகளை விட்டுத் தவிர்த்திருந்தால், பிறர் குறை கூற வாய்பிருந்திருக்காது.

சிலர் தவறாக நடந்து கொண்டதால் நன்றாக நடப்பவர்களையும் குறை காணத் தொடங்கி விட்டார்கள்.

♦ **எ**ல்லாம் அதுவே. எல்லாம் ஹக்கு. எல்லாம் நாமே. ஹக்குக்குப் பொருத்தமான செயலைச் செய்ய ஹக்கு உங்கள் உள்ளத்தைத் திடப்படுத்துமாக.

அகம்பாவம் அற்றுப்போன இருதயத்தை ஹக்கு உங்களுக்குப் பூரணமாய் அருளுமாக. ஹக்கின் திருவருள் உங்களுக்கு உங்கள் கல்பில் நிறையுமாக. அதே ஹக்கின் ஒளிவை அருளுமாக. அந்த ஒளியில் உங்கள் வாழ்வு ஒளிமயம் பெறுமாக.

அஞ்சுதல், துக்கம், கவலை, முடியாதென்ற மனப்பான்மை, தளர்வு இவை வேண்டாம். தைரியமாக இருந்து எங்கும் விரிந்து பரந்த ஹக்கின் அருளில் நம்பிக்கை கொண்டு உற்சாகத்துடன் தொழிலைச் செய்யுங்கள். அதுவே சிறப்புறும். *(மதுரை P.A.அப்துர் ரவூப் ஜின்னா அவர்களுக்கு அருளிய பட்டோலையிலிருந்து......)*

---

**எல்லாப் பொருட்கு மிறையோ னீயே**
**வல்லவ னீயே மனநிறை நீயே**
**இல்லவ னென்றிலா வுள்ளவ னீயே**
**நல்லவ னீயே நாமுனைப் போற்றுதும்.**

**இல்லகி நீயே யீசனு(ம்) நீயே**
**அல்லல்க ணீக்கி யாள்பவ னீயே**
**நல்லவர் நாட்டம் நல்குவ னீயே**
**எல்லைய தில்லா வேகனு(ம்) நீயே.**

– சங்கைமிகு
செய்கு நாயகம் அவர்கள் –

**கௌதுஸ்ஸமான் ஜமாலிய்யா மௌலானா (ரலி) அவர்கள் துர்ரத்துல் ஆரிஃபீன் ஃபீ அக்லாகிஸ் ஸாலிஹீன் என்ற கிதாபில் பெருமானார் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் மீது மவாஹிபுல் அன்வார் ஃபீ மனாகிபில் முஸ்தஃபல் முக்தார் என எழுதியிருந்த அற்புதமான பைத்து.**

عنايتهم خيرات حسان اجلة
لسعداء سادات بحبك صلت
عليك مع التسليم عد الجبلة
عموم مضت من ذكر اوصافك التي تطيب بها قلبي وقصدي مبلغ
فثناء عند اهل السعد انفع حرفة
بمدح رسول البعث فينا برحمة
وليس له شبه بفضل ورأفة
فكل علوم الانبياء كغرفة بحر علوم المصطفى هو اشرف
فتيح مكين بالخلائق عصمة
وادفع كل الانبياء مسلمة
واسرع بالاعطاء خيرا ونعمة
فصيح كلام ارحم الخلق رحمة رسول كريم بالغيوب معرف
قل الصدق يا خلي بان كان زينه
يفوق جميع الانبياء ودينه
على كل دين والاله معينه

قَتَادَةُ فِي أُحُدٍ تَمَزَّقَ عَيْنُهُ ، فَقَرَّرَهَا بِالْكَفِّ أَحْمَدُ أَشْفَقُ

تَنُوتُ لِوَلِيِّهِ وَبِالْخَيْرِ قَاسِمٌ
وَأَزْهَدُ كُلِّ الرُّسْلِ بِالْحَقِّ لَازِمٌ
وَأَحْلَمُهُمْ فَضْلًا وَبِالصَّبْرِ دَائِمٌ

نَوَى بِتَقْوَى اللهِ فِي اللَّيْلِ قَائِمٌ ، إِلَى أَنْ شَكَتْ قَدَمَاهُ ضُرًّا يُرَاهِقُ

كَفَى اللهُ لِلْمُدَّاحِ عَنْهُمْ مُسِيبَةً
وَظُلْمًا مِنَ الْأَعْدَا وَمِحَنًا وَنِقْمَةً
فَيَا فَوْزَ مَنْ نَالُوا مِنَ الْحُبِّ حَبَّةً

كَرِهَتْ ذَوِي جَهْلٍ تَجَافَوْا مَحَبَّةً ، إِلَى سَيِّدِ الْأَعْرَابِ وَالْعَجَمِ وَالتُّرْكِ

كَثِيرُ الْعَطَا وَالْجُودِ مِنْ كَفِّهِ نَمَا
وَمِنْهَا زُلَالٌ سَالَ وَالصَّحْبُ ظَمَا
وَفَرَّتْ بِهَا الْأَعْدَاءُ بِالتُّرْبِ قَدْ رُمِي

كَرِيمٌ كَمَالُ الْحُسْنِ وَالْخُلُقِ كُرْمًا ، وَأَثْنَى عَلَى خُلُقٍ لَهُ مَالِكُ الْمُلْكِ

لِكُلِّ رَسُولٍ مَنْصِبٌ وَصِفٌ بِالنَّدَا
وَبِالشَّرَفِ وَالْإِكْرَامِ وَالْفَضْلِ وَالْهُدَى

بل الله في الأوصاف أعظم أحمدا

له الشرف كل الشرف والجاه سرمدا ، وكل فضيلات تفوق ذوي الفضل

لكان لنا فضل على كل أمة

بأفضل فضلاء النبيين جمة

عليهم صلوة الله أعداد نسمة

لاجملهم خلقا وخلقا برحمة ، رسول لنا النبي جميع المهلل

منيع الحما قد كان بالمدح أجدرا

وأول كل الخلق خلقا وأصدرا

وكان ختام الرسل بالبعث للورى

مليح حوى فضلا وحسنا منورا ، بكل كمال والجمال وسيم

مواهب رب الجود أرجوه نائلا

وأرجو به رشدا وبالخير فاعلا

وكل البلا والحزن عني زائلا

مدحت رسول الله أرجوه سائلا ، بفوز غنا الدارين وهو نعيم

فهي تطيف في المعالي مؤبدا ،

حَبِيبٌ لَهُ فِي كُلِّ حَالٍ مُصَمَّدٌ

مَلِيحٌ بِكُلِّ الحُسْنِ بِالخُلْقِ اَحْمَدُ

نَبِيٌّ كَرِيمٌ هَاشِمِيٌّ مُمَجَّدٌ ، ظَرِيفٌ بِكُلِّ الوَصْفِ وَهُوَ مَكِينُ

نَوَيْتُ بِمَدْحِي حُبَّ مَنْ حُبَّ رَبِّهِ

اَحَبَّ اِلَيْهِ مِنْ جَمِيعِ مُحِبِّهِ

وَقَدْ قَالَ اِنَّ المَرْءَ مَعَ مَنْ اَحَبَّهُ

نَجَا كُلُّ مَنْ قَدْ دَامَ فِي القَلْبِ حُبُّهُ ، وَلَيْسَ لَنَا ذُخْرٌ سِوَاهُ مُعِينُ

وَلِيُّ الحَسَنَاتِ وَبِالخَيْرِ مُسْعِدٌ

خَلِيلٌ لِرَبِّ العَرْشِ لِلْعَفْوِ مُرْشِدٌ

حَمِيدٌ بِكُلِّ الخَيْرِ وَالشَّرِّ مُبْعِدٌ

وَحِيدٌ بِاَعْلَى الرُّتَبِ وَالفَضْلِ مُفْرَدٌ ، جَدِيرٌ بِكُلِّ الوَصْفِ وَالعِزِّ وَالعَفْوِ

وَكِيلُ اِلٰهِ العَرْشِ وَهُوَ مُشَفَّعٌ

عَلَى كُلِّ اُمَمٍ وَهُوَ فِي الرُّسُلِ اَطْوَعُ

وَاَتْقَى جَمِيعِ الاَتْقِيَاءِ وَاَقْنَعُ

وَفِي بُعْدِ اِلٰهِ لِلّٰهِ اَخْشَعُ ، وَاَصْفَى جَمِيعِ الاَنْبِيَاءِ ذَوِي الصَّحْوِ

# ரஜபு மாதமும் புனித மிஃராஜும்

**மாதத்தின் சிறப்பு**

ரஜப் மாதம், இஸ்லாமிய ஹிஜ்ரீ ஆண்டின் 7 வது மாதமாகும். 'ரஜப்' என்றால், கண்ணியம் என்று பொருள். ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரஜப் மாத பிறை உதித்தால் 'யா அல்லாஹ்! ரஜப், ஷஃபான் மாதங்களில் எங்களுக்கு அபிவிருத்தி செய்வாயாக. ரமலான் மாதத்தை எமக்கு அடையச் செய்தருள்' என்று பிரார்த்தனை செய்வார்கள். "ஏனைய உம்மத்துகளைவிட என்னுடைய உம்மத்துகளின் சிறப்பு எவ்வாறு உள்ளதோ, அவ்வாறே ஏனைய எல்லா மாதங்களையும் விட ரஜப் மாதம் சிறப்புக்குரியதாக உள்ளது" என்று ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள்.

**ரஜப் மாதத்தில் செய்ய வேண்டிய அமல்கள்**

ரஜப் மாதத்தில் அமல் செய்வதற்கு 5 நாட்கள் சிறப்பானவை:

1. ரஜப் மாத முதல் இரவு; மஃரிப் தொழுகைக்குப் பின் 10 ஸலாமைக் கொண்டு 20 ரக்அத் நபில் தொழுங்கள். ஒவ்வொரு ரக்அத்திலும் அல்ஹம்து சூராவுக்குப் பின் குல்ஹுவல்லாஹு சூராவை ஒரு தடவை ஓதுங்கள்.

2. முதல் வியாழக்கிழமை மாலை (வெள்ளி இரவு): இதை 'லைலத்துல் முபாரக்' என்பர். அன்று மஃரிப் தொழுகைக்குப் பின் 6 ஸலாமைக்கொண்டு 12 ரக்அத்திலும் அல்ஹம்து சூராவுக்குப் பின் 'இன்னா அன்ஸல்னா' ஒரு தடவையும், 'குல்ஹுவல்லாஹு' 12 தடவையும் ஓதுங்கள்.

3. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஜும்ஆவுக்கும் அஸருக்கும் இடையில்: ஒரே ஸலாமைக் கொண்டு 4 ரக்அத் நபில் தொழுங்கள். ஒவ்வொரு ரக்அத்திலும் அல்ஹம்து சூராவுக்குப் பின் ஆயத்துல் குர்ஸீ 7 தடவையும், குல்ஹுவல்லாஹு 5 தடவையும் ஓதுங்கள்.

4. 15 வது இரவில்: இஷாத் தொழுகைக்குப் பின் 10 ஸலாமைக் கொண்டு 20 ரக்அத் நபில் தொழுங்கள். ஒவ்வொரு ரக்அத்திலும் அல்ஹம்து சூராவுக்குப் பின் குல்ஹுவல்லாஹு ஒரு தடவை ஓதுங்கள்.

5. மிஃராஜ் இரவு.

**மிஃராஜ் இரவு ஒரு விளக்கம்....**

ரஜப் மாதத்தின் 27 வது இரவிற்கு மிஃராஜ் இரவு என்று பெயர். இந்த இரவில்தான், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் என்னும் விண்ணேற்றப் பயணம் செய்தார்கள். அல்லாஹ்வை தரிசித்தார்கள். இந்த இரவில்தான் 5 நேரத் தொழுகை கடமை என நிர்ணயிக்கப் பட்டது. ஹிஜ்ரத்துக்கு ஓர் ஆண்டுக்கு முன்பிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மிஃராஜ் இரவில், வானத்தில் இருந்து ஆயிரக் கணக்கான வானவர்கள் இறையொளியைத் தட்டில் ஏந்தி பூமிக்கு இறங்கி, ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து, இறையோனின் நினைவில் ஈடுபட்டுள்ளவர் மீது இறையொளியைப் பொழிகின்றனர்.

**புனித மிஃராஜ் இரவில் ஆற்ற வேண்டிய அமல்கள்**

1. 6 ஸலாமைக் கொண்டு 12 ரக்அத் நபில் தொழுங்கள். ஒவ்வொரு ரக்அத்திலும் அல்ஹம்து சூராவுக்குப் பின், குல்ஹுவல்லாஹு சூராவை 5 தடவை ஓதுங்கள். தொழுது முடித்தவுடன் 3 ம் கலிமாவை 100 தடவை, இஸ்திஃபார் 100 தடவை ஓதியபின் துஆ கேளுங்கள். துஆ ஒப்புக்கொள்ளப்படுகிறது.

2. 3 ஸலாமைக் கொண்டு 6 ரக்அத் நபில் தொழுங்கள், ஒவ்வொரு ரக்அத்திலும் அல்ஹம்து சூராவுக்குப் பின் குல்ஹுவல்லாஹு 7 தடவை ஓதுங்கள். தொழுது முடித்து 50 தடவை ஸலவாத் ஓதி துஆ கேட்டால், அனைத்துத் தேவைகளையும் அல்லாஹ் நிறைவேற்றி வைக்கிறான்.

3. ஒரு ஸலாமைக் கொண்டு 2 ரக்அத் நபில் தொழுங்கள். முதல் ரக்அத்தில் அல்ஹம்து சூராவும், அலம் தர கைஃபவும், 2 வது ரக்அத்தில் அல்ஹம்துக்குப் பின் லி ஈலாஃபி குறைஷின் சூராவை ஓதுங்கள். இத்தொழுகைக்கு நிறைய நன்மைகள் உள்ளன.

---

***நக்கல் பாஷா கமெண்ட்ஸ்.***

æ *ஒவ்வொரு தேர்தலின் போதும், ஒவ்வொரு சுதந்திர – குடியரசு விழாக்களின் போதும் தீவிரவாதிகள் வர்றாங்க. தேர்தல் – விழாக்கள் – முடிந்ததும் போய் விடுகின்றார்கள். எதுக்கு வர்றாங்க .... ஏன் போறாங்க ஒருத்தரும் சொல்ல மாட்டேங்கறாங்க....*

æ *சங்கீஸ் எல்லோரும் டெலிபோன் எக்சேஞ்ஜுக்கு முன்னாடி ஆர்ப்பாட்டம் பண்ணிடப்போறானுவ...அவனுகளுக்கு டெலிப்ராம்ப்டர் வேற, டெலிபோன் எக்சேஞ் வேறன்னும் புரிய வைக்கணும்.*

## சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் அருளிய

# மிஃராஜ் துஆ (பிரார்த்தனை)

அல்லாஹ்வே, மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா வரை எம்பெருமானாரை நீ நடத்தினாயே அவர்கள் பொருட்டால் எம் அனைவருக்கும் தைரியத்தையும் உடல் சக்தியையும் மனோ நிம்மதியையும் தந்தருள்வாயாக!

அல்லாஹ்வே, எம்பெருமானார் முதல் வானத்திற் சென்றபோது சிறப்பும் மேன்மையும் தங்கிய ஆதம் (அலை) அவர்களைக் கண்டார்கள். அவர்கள் இருவர் பொருட்டாலும் சிறப்பையும் மேன்மையையும் எங்களுக்குத் தந்தருள்வாயாக!

அல்லாஹ்வே, இரண்டாவது வானிலே ஈஸா (அலை) அவர்களை எம்பெருமானார் கண்டார்கள். இவர்கள் இருவர் பொருட்டாலும் எமக்கு நிறைந்த ஈமானையும் பூரண தௌஹீத் ஞானத்தையும் உண்மைக்கு முரணானவர்களுடன் எதிர்த்துப் பேசி எதிரிகளை வெற்றி கொள்ளும் தன்மையையும் தந்தருள்வாயாக!

அல்லாஹ்வே, எம்பெருமானார் மூன்றாம் வானத்திலே யூஸுஃப் (அலை) அவர்களைக் கண்டார்கள். இவர்கள் இருவர் பொருட்டாலும் மாட்சிமையையும் உடல் அழகையும் நிறைந்த செல்வத்தையும் நோயற்ற வாழ்வையும் பாபமற்ற நற்கிரியைகளையும் எமக்குத் தந்து எமக்குச் சந்தோஷமான வாழ்வையும் நீடிய ஆயுளையும் தந்தருள்வாயாக!

அல்லாஹ்வே, நான்காம் வானத்தில் எம்பெருமானார் இத்ரீஸ் (அலை) அவர்களைக் கண்டார்கள். இவர்கள் இருவர் பொருட்டாலும் தௌஹீதிலே எம் தரங்களை உயர்த்தி உலக வாழ்விலே எம் தொழில்களில் உயர்ச்சியைத் தந்து எம் தொழில்களில் நிறைந்த லாபத்தையும் உணவில் விஸ்தீரணத்தையும் தந்து எம் வாழ்வில் இன்பம் கொழிக்கச் செய்வாயாக.

அல்லாஹ்வே, ஐந்தாம் வானிலே எம்பெருமானார் ஹாரூன் (அலை) அவர்களைக் கண்டார்கள். இவர்கள் இருவர் பொருட்டாலும் எம் குடும்பம், எம் உடைமைகள் எம்மைச் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் அனைத்துப் பொருள்களுக்கும் பாதுகாப்பை என்றென்றும் அருள்வாயாக. எம் அனைவருக்கும் வெற்றிமேல் வெற்றியைத் தந்தருள்வாயாக!

அல்லாஹ்வே, எம்பெருமானார் ஆறாவது வானிலே மூஸா (அலை) அவர்களைக் கண்டார்கள். அவர்கள் இருவர் பொருட்டாலும் எம் நாட்ட தேட்டங்களை நிறைவேற்றியருள்வாயாக. துன்பம் துயர்களை நீக்கியருள்வாயாக.

இறைவனை அறியும் பாக்கியத்தையும் எம்பெருமானாரின் ஷபாஅத்தையும் எமக்குத் தந்தருள்வாயாக! நாயகத்தின் எதிரிகளைச் செயல் இழக்கச் செய்வாயாக! தௌஹீதைச் சேர்ந்த கூட்டத்தினருக்கு பெருமதிப்பையும் பேரருளையும் பேருதவிகளையும் தந்தருள்வாயாக!

அல்லாஹ்வே, எம்பெருமானார் அவர்கள் ஏழாவது வானிலே இப்றாஹீம் (அலை) அவர்களைக் கண்டார்கள். எனவே, இவர்கள் இருவர் பொருட்டாலும், கொடிய நம்ரூதீன் நெருப்பிலிருந்து இப்ராஹீம் (அலை) அவர்களைக் காப்பாற்றியது போல் எம் கொடிய நோய்களிலிருந்தும் கொடிய சத்துருக்களிலிருந்தும் அவர்கள் உண்டுபண்ணும் கொடுமையிலிருந்தும் மனக்குழப்பங்களிலிருந்தும் அழிவிலிருந்தும் எம்மைக் காப்பாற்றி எமக்குச் சந்தோஷ வாழ்வையும் நீடிய ஆயுளையும் தந்தருள்வாயாக.

அல்லாஹ்வே, எம்பெருமானார் அதற்கு மேலும் சென்று அல்லாஹ்வை அறிவுக் கண்ணால் பூரணமாய்க் கண்டு இரண்டறக் கலந்து இன்பம் பெற்றார்களே அந்த இன்பத்தை எல்லாவற்றிலும் உன்னைக் கண்டு லயிக்கும் இன்பத்தை எமக்குத் தந்தருள்வாயாக.

அல்லாஹ்வே, இந்த இடத்தில் உன் நபிக்காக நாம் பிரசன்னமாகியுள்ளோம்; அவர்கள் பொருட்டால் எமக்குப் பேரின்பத்தைத் தந்தருள்வாயாக! இந்த ஊரையும் ஏனைய மற்ற ஊர்களையும் காப்பாற்றி அருள்வாயாக! எம் பாபங்களை மன்னித்து எமக்குப் பூரண வெற்றியைத் தந்தருள்வாயாக! உன் எதிரிகள் எங்கிருந்தாலும் தோற்றோட வைப்பாயாக! கபடம் சூதற்ற உண்மையான வாழ்க்கையை எமக்குத் தந்தருள்வாயாக!

உன்னில் கலந்து வாழும் வாழ்க்கையையே எம் வாழ்க்கையாக்குவாயாக!

---

**அதிர்ச்சிச் செய்தி :** நாடு முழுவதும் 800000 (எட்டு லட்சம்) முஸ்லிம் பெண்கள் முர்தத் ஆக மதம் மாறியுள்ளனர்.

இந்த எண்ணிக்கை திருமணப்பதிவு அலுவலகத்தின் மூலம் கிடைத்தது மட்டுமே. இதைத்தவிர கோவில்களில் மறைவாகச் செய்யக்கூடிய மதம்மாறிய திமுணங்களை அல்லாஹ்வே அறிவான். எளிமையாக நடத்தப்படவேண்டிய திருமணம் என்ற கடமையை ஆடம்பரமாக மாற்றியதன் விளைவை இன்று சமுதாயம் சந்திக்கின்றது.

**கர்நாடக மாநிலம் சீமூகாவைச் சேர்ந்த மௌலானா நவ்ஷீர் அஹ்மது**

.

*வலிமார்களின் வரிசையில்* **ஹள்ரத்**

# நிஜாமுத்தீன் அவ்லியா (ரலி)

அலாவுத்தீன் கில்ஜி இறந்ததும் அவரின் இரண்டாவது மகன் குத்புத்தீன் முபாரக், பட்டத்திளவரசரான கிதுர்கானைக் கொன்று விட்டு அரியணை ஏறினார். கிதுர்கான், காஜா அவர்களின் ஆன்மீக மாணவராக இருந்ததால் அவர்கள் மீது அவருக்கு இயற்கையாகவே வெறுப்பு ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் சுஹ்ர வர்தீ தரீக்காவின் கலீஃபாவாக இருந்த ஷைகு ஜியாவுத்தீன் ரூமியின் கரம்பிடித்து தீட்சை பெற்றார். சின்னாட்களில் வெறுப்பு, பகையாக முற்றியது.

காஜா அவர்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதையும் அவர்களின் தவமடத்தில் நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கானோர் உணவுண்டு வருவதையும் அதன் காரணமாக தினசரி அங்கு இரண்டாயிரம் ரூபாய் வரைச் செலவாகிக் கொண்டு வருவதையும் பொறாமைக் கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்த குத்புத்தீன் முபாரக் ஷா இதுபற்றித் தம் அந்தரங்க ஆலோசகர், காஜி முஹம்மது கஸ்னவீயை அருகழைத்து விசாரித்தார். “அவர் என்ன செய்வார்? தங்களின் அரசவைப் பிரமுகர்களும் படை வீரர்களும் தாம் அவரின் காலடியில் பொன்னைக் கொண்டு போய்க் கொட்டுகிறார்களே” என்று கூறினார் அம்மாபாதகர். உடனே அரச ஆணை பிறந்தது; இனிமேல் அரசவைப் பிரமுகர்களோ, படைவீரர்களோ, காஜா நிஜாமுத்தீனின் தவமடத்திற்குச் செல்லக் கூடாது, மீறிச் செல்லின் கடும் தண்டனைக்கு ஆளாவார்கள்!

இதனைச் செவியுற்ற காஜா அவர்கள் புன்முறுவல் தம் முகத்திலே தவழ தம்மால் விடுதலை செய்யப்பட்ட அடிமையும், ஊழியரும், ஆன்மீக மாணவரும் தம் தவமட நிர்வாகத்தைத் திறம்பட நடத்தி வருபவருமான காஜா இக்பாலை நோக்கி, “ இக்பால்! அல்லாஹ்வின் கருவூலம் மிகப் பெரியது, அள்ள அள்ளக் குறையாதது. ஆதலின் நீர் இன்றுமுதல் நம் தவமடத்தின் அனைத்துச் செலவுகளையும் இரட்டிப்பாக்க வேண்டும். பணம் தேவைப்படும் பொழுது இறைவனின் திருப்பெயர் கூறி இந்த மாடக்குழியில் கை இடும். உமக்கு வேண்டியது கிடைக்கும்” என்று கூறினார்கள்.

அவ்வாறே செய்து வந்தார் காஜா இக்பால். தவமடத்தை முன்னைவிட இருமடங்கு ஏழைகள் மொய்த்து நின்று உணவருந்திச் சென்றார்கள். ஆனால் அரசவைப் பிரமுகர்களோ படை வீரர்களோ ஒருவரேனும் அங்கு வரவில்லை.

இச்செய்தி உளவாளிகள் மூலம் சுல்தான் குத்புத்தீன் முபாரக் ஷாவுக்குத் தெரியவந்ததும் நான் தவறிழைத்துவிட்டேன். ஷைகு நிஜாமுத்தீனுக்கு அல்லாஹ் அறியாப் புறத்திலிருந்து இரணம் வழங்குகின்றான் என்று கூறினார். எனினும் காஜா அவர்களுக்கு எதிராக அவரின் உள்ளத்தில் வேரூன்றி விட்ட பகைமை உணர்வை அவரால் கிள்ளி எறிய இயலவில்லை. அதுவோ ஆலமரமென அவருடைய உள்ளத்தில் விழுதுவிட்டுப் படர்ந்து வளர்ந்து விட்டது!

"ஷைகு ருக்னுத்தீன் என்பவர் என்னைக் காண்பதற்காக மூல்தானிலிருந்து ஆண்டுக்கொரு முறை டில்லி வருகிறார். ஆனால் காஜா நிஜாமுத்தீனோ டில்லியிலிருந்து கொண்டே என்னைக் காண்பதற்கு வருகின்றாரில்லை. இஃது எனக்குப் பெரிய அவமானமாக இருக்கிறது. இதனை நீர் காஜாவிடம் சென்று கூறிவிட்டு வாரும்" என்று சொல்லியனுப்பினார்.

அமைச்சர் வந்து இச்செய்தியைக் காஜா அவர்களிடம் கூறியதும் "என்னைப் போன்ற ஃபக்கீர்கள் அரசவை செல்வது அவர்களுக்கு அழகல்ல. மன்னிக்க வேண்டும்" என்று சொல்லியனுப்பினார் காஜா. காஜாவின் பதில் சுல்தானை அமைதியுறச் செய்வதற்குப் பதிலாக ஆத்திரமுறச் செய்தது.

இக்காலை சுல்தான் 'மஸ்ஜிதெமீரி' என்னும் பெயருடன் டில்லியில் ஒரு பள்ளிவாயிலை நிறுவி, டில்லியிலுள்ள மார்க்க மேதைகள், மஷாயிகுகள் அனைவரும் ஜும்ஆ தொழ அப்பள்ளிக்கே வரவேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். நிஜாமுத்தீன் ஒளலியாவோ தம் தவமடத்தின் அருகேயுள்ள பள்ளிக்குத் தொழச் செல்வதே தம் தலையாய கடமை என்று கூறி அங்குச் செல்ல மறுத்து விட்டார்கள். இதனை அறிந்த சுல்தானுக்கு ஏற்பட்ட ஆத்திரத்திற்கு அளவில்லை. "என் ஆணைக்கு நீர் அடிபணிந்தே தீரவேண்டும்" என்று தனிப்பட்ட முறையில் காஜா அவர்களுக்கு ஆணை அனுப்பிவைத்தார் அவர்.

இப்பொழுது காஜா அவர்கள் தம் ஆன்மீக மாணவர் ஷைகு அலீ சஞ்சரியை சுல்தானின் ஆன்மீக ஆசான் ஜியாவுத்தீன் ரூமியிடம் அனுப்பி வைத்து ஃபக்கீர்களுக்கு வீண் தொந்தரவு கொடுக்காதிருக்குமாறு சுல்தானுக்கு அறிவுரை பகருமாறு வேண்டிக் கொண்டார்கள். ஆனால் ஷைகு அலீ சஞ்சரி, ஜியாவுத்தீன் ரூமியின் இல்லம் சென்ற பொழுது அவர் இறப்புப் படுக்கையில் கிடந்ததால் காஜா அவர்களின் செய்தியை அவரிடம் தெரியப்படுத்த இயலவில்லை. இதற்கு மூன்று நாட்களுக்குப்பின் ஜியாவுத்தீன் ரூமி இறப்பெய்தி டில்லியிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார். அவரின் மூன்றாம் நாள் பாத்திஹாவின்போது டில்லியிலுள்ள

அனைத்து மார்க்க மேதைகளும் மஷாயிகுமார்களும் கலந்து கொண்டார்கள். சுல்தானும் அதில் கலந்து கொண்டார். காஜா அவர்களும் அதில் கலந்து கொள்வதற்காக வந்த பொழுது அவையோர் அனைவரும் எழுந்து நின்று ‘ஸலாம்’ உரைத்து மரியாதை செய்தார்கள். இது சுல்தானின் பொறாமை உள்ளத்தில் எரியீட்டி பாய்ந்ததுபோல் இருந்தது. எனினும் அதனை வெளியே காட்டிக் கொள்ளாது திருக்குர்ஆனைத் திறந்து தம் முன் வைத்துக்கொண்டு ஓதுவது போன்று பாவனை செய்து கொண்டிருந்தார் அவர்.

அப்பொழுது சிலர் காஜா அவர்களிடம் “அதோ சுல்தான் வந்து அமர்ந்திருக்கிறார். அவரிடம் சென்று தாங்கள் ‘ஸலாம்’ உரைத்து வந்தால் நலமாயிருக்கும்” என்று கூறினர்.

காஜா அவர்கள் சுல்தான் வீற்றிருந்த பக்கம் ஏறிட்டுப்பார்த்தார்கள். அவர் குனிந்த தலைநிமிராது குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பதைக் கண்டதும் “நான் சென்று இப்பொழுது அவருக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது. இப்பொழுது நான் அவருக்கு ஸலாம் கூறாத போதினும் தவறில்லை” என்று கூறினர். இதன்பின் பாத்திஹா ஓதப் பெற்று ஒவ்வொருவரும் அவரவர் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

சில நாட்கள் கழிந்தன. அரசவையிலே மார்க்க விற்பன்னர்களும் மஷாயிகுமார்களும் சுல்தானின் அழைப்பின் மீது அணியணியாக வந்து அமர்ந்திருந்தனர். அவர்களை நோக்கி சுல்தான் காரசாரமாகப் பேசினார். “ஒவ்வொரு தலைப்பிறையின்போதும் நீங்கள் அனைவரும் நம் அரசவை வந்து எனக்கு ஆசி வழங்கிவிட்டுச் செல்கின்றீர்கள். ஆனால் காஜா நிஜாமுத்தீன் மட்டும் வராது காஜா இக்பால் என்பவரைத் தம் பிரதிநிதியாக என்னிடம் அனுப்பிவைக்கிறார். இதனை என்னால் இனியும் பொறுத்துக் கொண்டிருக்க இயலாது. இதனை நீங்கள் அவரிடம் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். இனிமேலும் அவர் தம் முந்தைய வழக்கப்படியே செய்வாராயின் பின்னர் என்ன நடக்கிறது என்பதைப் பாருங்கள்”. என அனற்பொறி தெறிக்கக் கர்ச்சித்தார் அவர்.

எச்சரிக்கையும் பயமுறுத்தலும் நிரம்பிய இச்செய்தியை காஜா அவர்களிடம் ஷைகு இமாதுத்தீன் தூஸி, ஷைகு வஹீதுத்தீன் கந்தாரீ, மௌலானா புர்ஹானுத்தீன் ஆகியோர் எடுத்து வந்து உரைத்து “சுல்தானின் போக்கு எங்களுக்குச் சிறிதேனும் பிடிக்கவில்லைதான். எனினும், வீண் விபரீதங்களைத் தடுக்க தாங்கள் அவரின் விருப்பத்திற்கு இசைந்து போவது நலமெனக் கருதுகிறோம்” என்று கூறினர்.

அவர்கள் கூறியதைக் கேட்டு சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிய காஜா அவர்கள் அதன்பின் தம் செவ்விய அதரம் திறந்து "இன்ஷா அல்லாஹ்" என்று கூறினர்.

அதுகேட்டுப் பெரிதும் மகிழ்ந்த அத்தூதுக் குழுவினர் உடனே சுல்தானிடம் சென்று இதனை எடுத்துரைத்த பொழுது அவரும் சொல்லொணாக் குதூகலம் அடைந்தார். இது நிகழ்ந்தது. ஸஃபர் மாதம் 27- ஆம் நாளாகும்.

இதனைக் கேள்வியுற்ற காஜா வஹீத் குரைஷியும் அமீர் குஸ்ருவின் உடன் பிறந்தார் இஸ்ஸூத்தீனும் காஜா அவர்களை அணுகி "ஷைகு அவர்களே! தாங்கள் சுல்தான் அவர்களைச் சந்திக்கப் போவதாகக் கேள்வியுற்றோமே. அது உண்மையா? அல்லது வீண்புரளியா?" என்று வினவினர்.

அதற்கு காஜா அவர்கள் நேரடியாக பதில் கூறாது, "நான் என் ஆன்மீக ஆசான்களின் முன் மாதிரிக்கு மாற்றமாக நடந்து கொள்ளமாட்டேன்" என்று கூறினர்.

அவர்கள் கூறியதன் உட்பொருளை விளங்கிக் கொண்ட அவ்விருவரும், "அரசரோ இவர்களின் வரவை எதிர்பார்த்து ஆவலுடன் உள்ளார். இவர்களோ இவ்வாறு கூறுகிறார்கள். இந்நிலையில் என்னாகுமோ?" என்று ஏங்கித் தவித்தபொழுது அவர்களின் ஏக்கத்தை அவர்களின் முகக்குறியால் விளங்கிக்கொண்ட காஜா அவர்கள், "கவலையின்றி இல்லம் செல்லுங்கள்" என்று ஆறுதல் மொழி பகர்ந்தார்கள்.

ஸஃபர் பிறை 28 ஓடி மறைந்து 29- ஆம் பிறையும் வந்துசேர்ந்தது. ஊழியர் "ஷைகு அவர்களே! தாங்கள் அரசவை செல்ல வேண்டியுள்ளதே, கடைத்தெரு சென்று ஏதேனும் காணிக்கைப் பொருட்கள் வாங்கி வரவா?" என்று வினவினார்.

"பொறும்; அஸர் தொழுகைக்குப் பின் பார்த்துக் கொள்வோம்" என்று கூறினர் காஜா.

அஸர் தொழுதுவிட்டு அவர் காஜா அவர்களை அணுகி அதே வேண்டுகோளை விடுத்த பொழுது காஜா அவர்கள் யாதொரு பதிலும் கூறவில்லை. இது இக்பாலின் உள்ளத்தில் சிறிது ஐயத்தை ஏற்படுத்தியது.

இதன்பின் பின் என்ன நடந்தது என்பதை மனாஸிர் அஹ்ஸன் ஜீலானி இதோ கூறுகிறார். நாமும் கேட்போம்.

“மாதம் தம் முடிவை அணுகிக் கொண்டிருந்தது. காஜாவின் அபிமானிகளும் மாணவர்களும் பெரிதும் துயரத்திற்கு ஆளாயினர். இறுதியாக தலைப்பிறையும் வானில் தோற்றமளித்தது. டில்லி மக்களின் இதயங்களை ஒருவகைப் பீதி கௌவிப்பிடித்தது. இரண்டு சுல்தான்களும்– இலௌகீக சுல்தானும் ஆன்மீக சுல்தானும்– மோதிக் கொள்ளத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். என்ன நடக்கப்போகிறது என்பதை எவரும் அறியாது திணறிக் கொண்டிருந்தார்கள். அன்றிரவு சுல்தானின் விதியைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு பொல்லாத இரவாக இருந்தது. தாழ்ந்த குடியில் பிறந்து இஸ்லாத்தைத் தழுவி சுல்தானின் அந்தரங்க ஆலோசகன் போன்று விளங்கிய குஸ்ருகான் சுல்தான் குத்புத்தீன் முபாரக் ஷாவைக் கொன்று அவருடைய தலையை ஆயிரம் தூண்களையுடைய அரசமாளிகையின் முற்ற வெளியில் வீசி எறிந்து டில்லி அரியணை ஏறினான்”. தன் நேசரைப் பகைத்த ஒருவரை அவருடைய நேசனைக் கொண்டே அல்லாஹ் பழிதீர்த்துக் கொண்டான்!

குஸ்ரூகான் அரியணை ஏறியதும் மார்க்க விற்பன்னர்களுடையவும் மஷாயிகுமார்களுடையவும் நல்லெண்ணத்தையும் நன்மதிப்பையும் பெறுவதற்காக ஏராளமான பொற்காசுகளை அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினான். காஜா அவர்களுக்கும் ஐம்பது லட்சம் தங்கக் காசுளை அன்பளிப்பாக அனுப்பிவைத்தான். அவற்றைக் கையாலும் தீண்டாது அங்குக் குழுமியிருந்த ஏழை எளியவர்களுக்கு அறம் செய்து விடுமாறு பணித்தார்கள் காஜா.

நான்கு ஆண்டுகள் கழிந்தன. ஹிஜ்ரி 721– ஆம் ஆண்டில் ஒருநாள் மலிக் காஜியாகப் பணியாற்றிய கியாஸுத்தீன் துக்ளக் டில்லி மீது படையெடுத்து வந்து குஸ்ரூகானைக் கொன்று அரியாசனம் ஏறினார். உடனே குஸ்ரூகான் அரசாங்கக் கருவூலத்திலிருந்து அன்பளிப்பாக வழங்கிய பொருட்கள் எல்லாம் திருப்பிக் கொணரப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார். அரச ஆணைக்கு அஞ்சி அனைவரும் அவ்விதமே செய்தனர். காஜா அவர்களோ அவ்வாணையை அணுவேனும் பொருட்படுத்தாது வாளாவிருந்தார்கள். *(வரலாறு வளரும்)*

---

**நையாண்டி காதர்:** *காது குத்தியதற்கான அடையாளமும் மூக்கு குத்தியதற்கான அடையாளமும் தெரிந்து விடுகிறது. ஆனால் முதுகில் குத்தியதற்கான அடையாளம் மட்டும் தெரிவதே இல்லை.*

---

**இருக்கும்போது புரிந்து கொண்டு அன்பு காட்டாத எந்த உறவும் இறந்தபின் அழுது புலம்புவதில் எந்தப் பயனும் இல்லை.**

# இப்னு தைமிய்யா மரணமடைந்த போது....

வஹாபிஸத்தின் மூல குரு இப்னு தைமிய்யா ஆவார் என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

முஹம்மதிப்னு அப்துல் வஹாப் இப்னு தைமிய்யாவின் கொள்கைளின் அஸ்திவாரத்தின் மீதுதான் தனது வஹாபிய மதம் எனும் கட்டடத்தைக் கட்டி எழுப்பினார்.

ஜனாஸாவுக்குப் பக்கத்திலிருந்து குர்ஆன் ஓதக்கூாது. கப்ருகளைக் கட்டக்கூடாது என்றெல்லாம் கூப்பாடு போடும் வஹாபிஸத் தலைவர் இப்னு தைமிய்யா மரணமடைந்தபோது நடந்த நிகழ்வுகளை, அவரது மாணவரும் தலை சிறந்த குர்ஆன் விரிவுரையாளருமான இப்னு கஸீர் தமது ‘அல்பிதாயா வந்நிஹாயா’ என்ற நூலில் பட்டியலிடுவதைப் பாருங்கள்.

1. பெருந்திரளாக மக்கள் ஜனாஸாவுக்கு அருகிருந்து குர்ஆன் ஓதினர்.

2. மய்யித்திற்கு முத்தம் கொடுப்பதன் மூலம் மையித்தின் பரக்கத் பெற்றனர்.

3. மையித்தின் பரக்கத் பெற்றிட ஜனங்கள் தங்களது கைக்குட்டைகள் மற்றும் தலைப்பாகைகளை ஜனாஸாவின் மீது வைத்து எடுத்தனர்.

4. மய்யித்தைக் குளிப்பாட்டிய தண்ணீரின் மீதத்தைக் குடித்தனர்.

5. மய்யித்தைக் குளிப்பாட்டிய தாளி இலையைப் பங்கிட்டு எடுத்தனர்.

6.தொப்பியை 500 திர்ஹத்துக்கு ஏலம் எடுத்தனர்.

7. பேன் தொல்லை தவிர்க்க பிடரியில் பயன்படுத்திய பொருளை 150 திர்ஹத்திற்கு விற்பனை செய்தார்கள்.

8. அவருக்கு ஏராளமாக குர்ஆன் ஓதி கத்மு செய்யப்பட்டது.

9. மக்கள் துக்கத்திலும் தஹ்லீலிலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

10. பெண்கள் கட்டடங்களின் மாடி மீது ஏறி நின்று அவரின் மக்பராவைப்பார்த்து அழுது துஆ செய்தனர்.

*ஆதாரம்: அல்பிதாயா வந்நிஹாயா பாகம்– 14. பக்கம்– 236*

*தகவல் : மௌலவி, அல்ஹாஜ்,* B.M. *ஜியாவுத்தீன் பாகவி ஹள்ரத் அவர்கள்.*

# தொப்புள் கொடி உறவு...

**தொப்புளில் எண்ணெய் வைப்பதால் ஏற்படும் பயன்கள்...**

குழந்தை பிறந்தவுடன் தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் உள்ள தொடர்பு துண்டிக்கப்படும் இணைப்பே தொப்புள் கொடியாகும். இந்தத் தொப்புள் கொடி குழந்தை பிறந்த 20 முதல் 40 நாட்களுக்குள் காய்ந்து விழுந்து விடும்... இதனை எடுத்து பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும்..

நம் முன்னோர்கள் இந்த தொப்புள் கொடியை எரித்து சாம்பலாக்கி ஒரு தாயத்தில் அடைத்து இடுப்பில் அல்லது கழுத்தில் குழந்தைகளுக்கு கட்டி விடுவார்கள். இது 1980 க்கு முன் பிறந்தவர்களுக்கு நன்றாக தெரியும்... தற்போது பல தனியார் நிறுவனங்கள் இந்த தொப்புள் கொடியை பாதுகாக்க லட்சக்கணக்கில் பணம் பெற்றுக் கொண்டு அதனை கவனமாகப் பாதுகாக்கின்றனர்.

அப்படி என்ன இந்த தொப்புள் கொடியில் சிறப்பு உள்ளது என நாம் நினைக்கலாம். குழந்தைக்கு எல்லா வைத்தியமும் செய்து, தீர்க்க முடியாத வியாதியாக இருந்தால் இந்தத் தொப்புள் கொடியை சிறிது எடுத்து சுட்டு சம்பலாக்கி அதனைத் தேன் கலந்து நாக்கில் தடவி விட்டால் போதும். எப்படிப்பட்ட தீர்க்க முடியாத வியாதியாக இருந்தாலும் சரியாகி விடும். அவ்வளவு சிறப்பு வாய்ந்தது தொப்புள் கொடி. எனவே இனி குழந்தை பிறந்தால் அதன் தொப்புள் கொடியைப் பாதுகாப்பீர்..

■ கடுமையாக அடி வயிற்றில் வலி ஏற்பட்டால். அதாவது, பெண்களுக்கு அடிக்கடி இந்த அடிவயிற்று வலி ஏற்படும். இதற்கு உடனடியான தீர்வு நல்லெண்ணெய்யை தொப்புளிலும் அடிவயிற்றிலும் வைத்து நன்றாக சூடு பறக்க தேய்த்து விட்டால் சரியாகி விடும். மாத விலக்கின் போது ஏற்படும் கடுமையான வலிக்கும் தொப்புளில் நல்லெண்ணெய் வைத்து தேய்த்து வந்தால் அந்த வலி குறையும்... ஆனால் இதனை யாரும் செய்ய விரும்புவதில்லை என்பதுதான் இன்றைய நிலை.

அடுத்து கண்பார்வை குறைபாடு, கண் எரிச்சல், கண் சிவப்பாக மாறுதல், கண்ணிலிருந்து நீர் வடிதல், கண்ணில் அரிப்பு, பார்வை மங்கலாகத் தெரிதல், அதிகமான உடல் சூடு ஆகியவற்றிற்கு தொப்புளில் விளக்கெண்ணெய்யை வைத்து, தொப்புளை சுற்றி நான்கு அங்குலம் அளவிற்கு நன்றாக சூடுபறக்க தேய்த்து வர வேண்டும். 100 சதவிகிதம் குணமாகும். பெரும்பாலும் இந்தப் பிரச்சனைகள் பெண்களை விட ஆண்களுக்கே அதிகமாக ஏற்படும். எனவே இந்த முறையை இரவில் செய்து விட்டு படுத்தால் நல்ல பலன் கிடைக்கும்.

• பாத எரிச்சல், தூக்கமின்மை, நெஞ்சு படபடப்பு, கழுத்து வலி, முதுகு வலி ஆகியவற்றிற்கு தேங்காய் எண்ணெய் அல்லது கடுகு எண்ணெயை தொப்புள் மற்றும் கால் பாதத்தில் வைத்து நன்றாக தேய்த்து வர வேண்டும். இந்த பிரச்சனைக்கு முழுமையான தீர்வு கிடைக்கும்.

• வாரம் ஒரு முறை நல்லெண்ணெய் தேய்த்து காலை இளம் வெயிலில் அரைமணி நேரம் அமர்ந்து, பின்னர் குளிப்பது உடலை மிக ஆரோக்கியமாக வைக்கும்.

• உடலில் அதிகமாக சூடு உள்ளவர்கள் உச்சந்தலையில் ஒரு சொட்டு விளக்கெண்ணெய் வைத்தால் போதுமானது. உடல் சூடு குறைந்து விடும்.

• குப்பைமேனி குளியல் சோப்பை இக்கோடையில் பயன்படுத்துங்கள்.

• ஆண்மைபலம் பெருக ஊட்டச்சத்து மாவை பயன்படுத்துங்கள்.

மருந்தளிப்பவர் வைத்தியர்... குணமளிப்பவன் இறைவன்!

## நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விரும்பிச் சாப்பிட்ட மருத்துவ குணங்கள் கொண்ட உணவுகள்.

*கருஞ்சீரகம் –அனைத்து நோய்களுக்கும் நிவாரணம்.*

*பார்லி – காய்ச்சலுக்கு நிவாரணம்.*

*பேரீத்தம்பழம் –இரும்புச் சத்து அதிகம், இரத்த விருத்தி.*

*தேன் – வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கும், பல நோய்களுக்கும் நிவாரணம்*

*பால் – மூளைக்கும் கண் பார்வைக்கும்.*

*அத்திப்பழம்– மூல நோய்க்கு மருந்து.*

*தர்பூசணிப் பழம் – தாது விருத்தி.*

*காளான் – கண் பார்வைக்கும் பக்கவாதத்திற்கும் மருந்து.*

*வினிகர் –அஜீரணக் கோளாறுகளை நீக்கும்.*

*திராட்சை – இதன் விதை புற்று நோய்க்கு மருந்து.*

*ஆலிவ் எண்ணை – சருமத்திற்கும் கூந்தலுக்கும்.*

*மாதுளம் பழம் –இதயப் பாதுகாப்புக்கு.*

*சுரைக்காய் – நீர்ச்சத்து நிறைந்தது.*

12 *சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்களின்*

# 85–ஆம் உதய நாள் விழா

## காணொளிக் கூடல் உரைகள்!

*உரைகள் தொகுத்தவர்: அன்ஸாரி -இப்னு கிப்லா ஹள்ரத் - திருச்சி.*

**இலங்கை ஆத்தும சகோதரர் ஜனாப்.வெஸ்மி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**

நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் திருப்பாதங்களைப் பணிந்தவனாக எனது உரையைத் தொடங்குகின்றேன். சங்கைக்குரிய மௌலானாமார்கள், கண்ணியத்திற்குரிய கலீபாப் பெருமக்கள், அன்பிற்குரிய ஆத்தும சகோதரர்கள் அனைவருக்கும் இலங்கை சபையின் சார்பாக இனிய ஸலாத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

நேரத்தின் அருமை கருதி, கூடுதலான நேரம் எடுத்துக்கொள்ளாமல் எனது உரையைச் சுருக்கமாக முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களுக்கு அருகில் இருப்பதால் மிக மிக நல்ல அனுபவங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள நினைக்கின்றேன்.

**இனிய நினைவலைகள்**

சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் காலத்தின் இரசூல் என்றும் காலத்தின் முஹிய்யுத்தீன் என்றும் நிச்சயமாக நாங்கள் அறிந்து வைத்திருக்கின்றோம். மேலும் அவர்களே ஹக் என்பதையும் நிச்சயமாக அறிந்து வைத்திருக்கின்றோம். நாயகமவர்களை காலத்தின் இரசூல் என்று நாங்கள் வெறுமனே வார்த்தையில் மட்டும் கூறவில்லை. அருகில் இருந்து அவர்களுடன் இருக்கும் நேரத்தில், காலத்தின் இரசூல் இவர்கள் தாம் என்பதை எவ்வெவ் வகையிலெல்லாம் நாங்கள் உணர்ந்திருக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்கையில் வியப்பும் சந்தோசமும் எங்களிடம் மிகைத்து நிற்கிறது.

திருக்குர்ஆன் ஷரீஃப், வஃ லமூ அன்ன ஃபீகும் ரசூலுல்லாஹ் – உங்கள் இரசூல் உங்கள் மத்தியில் தான் இருக்கிறார்கள் என்பதாகக் குறிப்பிடுகிறது.

திருக்குர்ஆன் ஷரீஃபின் வசனங்கள் எந்தக் காலத்திற்கும் பொருந்தும் என்பது சத்தியம் என்னும் நோக்கில், இந்தக்காலத்தில் யாரை இரசூலாகப் பார்க்க வேண்டும் என்று சிந்தித்தோமானால், காமில் ஷைகான நமது ஷைகு நாயகமவர்களைத் தாம் மேற்கண்ட இத்திருவசனத்திற்குப் பொருத்திப் பார்த்து, உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு விசயத்தையும், குர்ஆன் – ஹதீதுகளை ஒப்பிட்டுப் பார்த்தோமானால், காலத்தின் இரசூலாகத் திகழ்வது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் தாம் என்பதை நாம் நன்றாக உணர்ந்து கொள்ளலாம்.

## அனுபவ அறிவுப் பொக்கிஷங்கள்

வரலாற்றில், இரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஸஹாபாக்கள் நடந்து கொண்ட முறைகள், கொண்டிருந்த அன்பு, காத்துவந்த கண்ணியம், உதாரணமாக ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழைத்தால், உடனே பதிலளியுங்கள் என்பன போன்ற நற்குணங்கள், இப்படியாக ஒவ்வொரு விசயமாக நாம் சிந்தித்துப் பார்த்துச் செயல்பட வேண்டும். மேற்கண்ட ஒவ்வொரு அறிவுரைகளையும் வழிகாட்டுதலையும் பின்பற்றி இந்தக் காலத்தில் யாரைக் காலத்தின் இரசூலாகப் பார்ப்பது என்பதைச் சிந்தித்தால், சந்தேகமேயின்றி, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களைக் காலத்தின் இரசூலாக உணர்ந்து கொள்ளலாம்.

இதுபோன்று பல விசயங்களை நாம் படித்தும், கேட்டும், அறிந்தும், தெரிந்து வைத்திருக்கின்றோம். எனினும், உள்ளார்த்தமாக எப்படி உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை மிகவும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஃபனாஃபிஷ்ஷைக் என்னும் அர்ப்பணிப்பு உணர்வைக் கொண்டல்லாமல், ஒருக்காலும் நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களை காலத்தின் இரசூலாக உணர்ந்து கொள்ளமுடியாது. அதாவது, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைக் காலத்தின் இரசூலாக நாம் கேட்டும் தெரிந்தும் வைத்திருப்பது மட்டுமின்றி, உண்மையாக உணர்ந்திருக்கின்றோம் என்பதற்கு அடையாம், ஃபனாஃபிஷ்ஷைக் என்னும் முறையில் பரிபூரணமாக நம்மை நாம் நாயகமவர்களிடம் அர்ப்பணித்துவிடுவது தான். காலத்தின் இரசூலை அனுபவப்பூர்வமாக உணரக்கூடிய விசயம், நாயகமவர்களிடம் நம்மை நாம் சரணாகதியாக்காமல் ஒருநாளும் நமக்குக் கிடைக்கவே கிடைக்காது.

## சரணாகதியாக வேண்டும்

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் யார்? என்னும் விசயம் நமது உணர்வில்எ ப்போதும் உயிரோட்டமாக இருக்க வேண்டும். அவ்வாறு

உயிரோட்டமாக இருப்பதற்கும் நம்மை நாம் அவர்களில் ஃபனாவாக்கி சரணாகதியாகியிருக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்லப்போனால், இந்தப் பிரபஞ்சம் ஒன்று தான். அன்றும் இதே ஒன்று தான். இன்றும் அதே ஒன்று தான். அது மாறுவதல்ல. ஒவ்வொரு காலத்திற்கு அதற்கு வழங்கப்பட்ட பெயர்கள் தாம் வித்தியாசமே தவிர, அந்தப் பிரபஞ்சம் எப்போதும் ஒன்றுதான். அப்படிப் பார்க்கையில், இப்போது பிரபஞ்சமாகத் திகழ்வது, நமது கண்மணி ஷைகு நாயமகவர்கள். அவர்கள், தோன்றுதுறையாக உருவெடுத்து வந்துள்ளார்களே தவிர, அவர்கள் தாம் பிரபஞ்சமாக இருக்கிறார்கள்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் பக்கத்தில் இருந்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் அருளக்கூடிய ஒவ்வொரு விசயத்தையும் கேட்கும்போது, அவர்கள் தம் வாழ்வியலில் கண்ணுறும்போது, அவற்றிலிருந்து நிறைய விளங்கிக் கொள்ள முடிகிறது.

**அறிந்தவர்கள் அறிவார்கள்**

ஒருமுறை, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைத் தரிசிக்க முரீது ஒருவர் இல்லத்தினுள் நுழையும்போது, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், உரத்த குரலில் அஸ்ஸலாமு அலைக்கும் என்பதாக ஸலாம் அருளினார்கள். அதுகேட்ட அந்த முரீது ஸலாமுக்குப் பதிலுரைக்காமல், ஆமீன் என்பதாகக் கூறினார்; அதற்கு, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் தமாசாக... நாங்கள் கூறிய ஸலாத்திற்கு இதுதானா பதில்? ஸலாமுக்கு ஆமீன் என்றா பதில் கூறுவது? என்று கேட்டார்கள். அதற்கு அந்த முரீதும் அங்கு குழுமியிருந்த மற்ற முரீதுப் பிள்ளைகளும், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களே, தங்களுக்கு ஸலாம் சொல்லும் அளவுக்கு நாங்கள் என்ன தகுதி பெற்றுவிட்டோம் வாப்பா! சாந்தியும் சமாதானமும் தங்கள் மீது உண்டாகட்டும் என்று எப்படி நாங்கள் தங்களுக்குக் கூறுவோம் வாப்பா!? அந்தத் தகுதி எங்களுக்கு இல்லை வாப்பா! என்று கூறினார்கள். அதற்கு, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், அறிந்தவர்கள் அறிந்து கொள்வார்கள் என்பதாக அருளினார்கள்.

ஆக, அவர்கள் எவ்வளவு உயரிய தரஜாவில் இருக்கிறார்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதை நினைவூட்டியவனாக எனது உரையை நிறைவு செய்து கொள்கின்றேன். எனக்கு இச்சிறப்புமிக்க விழாவில் இலங்கை சபை சார்பாக உரையாற்ற வாய்ப்பளித்த விழாக்குழுவினருக்கு எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன். *(உரைகள் உலா வரும்)*



# 4 கல்வத்து நாயகம் (ரலி)

M. சிராஜுதீன் –திருச்சி.

கல்வத்து நாயகம் அவர்களுக்கு அப்துல் குத்தூஸ் என்று ஒரு ஆண் பிள்ளையும், சித்தி பாத்திமா, ஆயிஷா பீவி என்ற இரண்டு பெண் மக்களும் பிறந்தனர். அவர்களில் முந்தைய இரண்டு பிள்ளைகள் மௌத் ஆகிவிட ஆயிஷா பீவி என்ற ஒரு பெண் பிள்ளை மட்டும் தங்கினார்கள்.

திருமணம் முடிந்து ஏழு ஆண்டுகளுக்குப் பின் அவர்களின் தந்தையின் சீடர்கள் அவர்களை இலங்கை வருமாறு பெரிதும் வேண்டிக் கொண்டதின்பேரில் அவர்கள் இலங்கை சென்றனர். அங்கு மக்கள் கொடுத்த வரவேற்போ அளவிட முடியாததாய் இருந்தது. அதே சமயம் சில பெருமைக்காரர்கள் என்ன இது? இவருக்கு இப்படியொரு வரவேற்பா? என்று சலித்தும் கொண்டனர். இப்படிப் பட்டவர்கள் எல்லா காலங்களிலும் இருக்கத்தான் செய்கின்றனர்.

அவர்கள் காலி என்ற ஊருக்கு வந்தபோது ஆலிம் ஒருவர் அவர்களிடம் வந்து, "மற்ற தரீக்காக்களில் ராத்திபுகளும், திக்றுகளும் ஒரே மாதிரியாக இருக்கிறது. காதிரியா தரீக்காவில் மட்டும் பல்வேறு விதமாக இருக்கிறதே" என்று இடக்காக வினவினார். அதற்கு கல்வத்து நாயகம் அவர்கள் உடனே பதில் கூறாமல் சற்று நேரம் தலையைத் தாழ்த்தியவாறு இருந்தார்கள். ஆலிம் மனதிலே ஒரே கொண்டாட்டம்.

டக்!!! என்று நிமிர்ந்த கல்வத்து நாயகம் அந்த ஆலிமைப் பார்த்து "நீங்கள் பிக்ஹு ஓதாதவர்போல் தெரிகிறதே" என்றார்கள். ஆலிம் திடுக்கிட்டுப் போனார். "இறைமறை ஒன்றாக இருக்க அதற்கு இத்தனை விரிவுரையா (துப்ஸீர்) என்று கேட்பீர்கள் போல இருக்கே! இஸ்லாம் ஒன்றாக இருக்க அதில் நான்கு மத்ஹபுகள் ஏன் என்று கேட்கவில்லையே!" என்று கடாவினார்கள். ஆலிம் எந்த பதிலும் பேச முடியாமல் ஏன்டா... இந்த கேள்வியைக் கேட்டோம் என்று தன்னைத் தானே நொந்து கொண்டார்.

சிறிது நேரம் கழித்து அந்த ஆலிம் அவர்களை அமரச் செய்து அவருக்கு விளங்கும்படி தக்க பதிலைச் சொல்லி அனுப்பினார்கள். மார்க்கத்திற்கு முரணாகப் பேசிக் கொண்டிருந்த பலர் இவர்களிடம் வந்து நேர்வழி பெற்றுச் சென்றுள்ளனர்.

அவ்விதம் நேர்வழி பெற்றவர்களில் ஒரு கவிஞரும் இருந்தார். அவர் இவர்களின் பேச்சில் மிகவும் கவரப் பட்டு அக்கணமே,

“வனச மாமலர் வதனராம் மின்னே சுகிர்த ரஞ்சித
வள்ளல் சையிதப் துல் காதிராம் கண்ணே!”

என்று தொடங்கும் ஒரு பாடலைப் பாடியே விட்டார்.

அதன்பின் கல்வத்து நாயகம் அவர்கள் வலிகாமம் என்ற ஊருக்குச் சென்றபொழுது அங்கு வழக்கறிஞராக இருந்த ஒருவர் அவர்களை வந்து சந்தித்தார். தாம் வழக்கமாக ஓதி ஈடேற்றம் பெற ஓர் இஸ்மை எழுதித்தர வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார். அவர்களும் “யா லத்தீப்” என்று எழுதிக் கொடுத்து அதனை வழக்கமாக ஓதிவரும்படிக் கூறினார்கள். அவரும் அதை மிகுந்த பயபக்தியோடு வாங்கிக் கொண்டார்.

வீட்டிற்குச் சென்றவுடன் கல்வத்து நாயகம் அவர்கள் கொடுத்த அந்த இஸ்மு எழுதப்பட்ட தாளை தம் பெட்டியில் வைத்து பூட்டி விட்டார். மறுநாள் காலை சுபுஹு தொழுகையை முடித்த பின்னர் அந்த இஸ்மை எடுத்து ஓத பெட்டியைத் திறந்து தாளை எடுத்துப் பிரித்தார் என்ன ஆச்சரியம்! அந்த இஸ்மின் கீழே ‘யா லத்தீப் நமுர பீஹ்” என்று ஒளி எழுத்துக்களால் எழுதப் பெற்று ஒளிர்வதைக் கண்டு பெரிதும் வியப்புற்று அத் தாளை எடுத்துக் கொண்டு, நேரே கல்வத்து நாயகம் அவர்களிடம் ஓடினார். ஷெய்கு அவர்களே தாங்கள் எழுதித் தந்த தாளை நான் பெட்டியில் வைத்து பூட்டி விட்டுத்தான் படுத்தேன் காலை ஓதுவதற்கு எடுத்த போது இப்படி கீழே எழுதப் பட்டிருக்கிறது என்று வியப்புடன் கூறினார். அதைகேட்ட அவர்கள் மெல்லிய சிரிப்புடன், “உற்றுணர்ந்து உய்வீராக” என்று கூறினார்கள். இலங்கையிலேயே கல்வத் இருக்க பல இடங்களைப் போய்ப் பார்த்தார்கள். அவர்கள் மனதிற்குப் பிடிக்கவில்லை. அதனால் மீண்டும் இந்தியாவிற்கே புறப்பட்டுவிட்டார்கள்.

ஊர் திரும்பிய அவர்கள், சூரத்துல் பாத்திஹா, ஆயத்துல் குர்ஸீ, கலிமா தையிபா ஆகியவற்றிற்குத் தனித்தனியாக உரை எழுதியதோடு குர்ஆனுக்கும் உரை எழுதத் தொடங்கி ஏழரை ஜுஸ்உ வரை விரிவுரை விளக்கவுரை எழுதினார்கள்.

இறைவன் திருமறையில் தொழுகையைப் பற்றி குறிப்பிடும்போது “ஹாஃபிளூ அலஸ் ஸலவாத்தி வஸ்ஸலாத்தி உஸ்த்தா” (2: 238) என்று கூறுகிறான். இதன் பொருள் தொழுகைகளையும் நடுத்தொழுகையையும் பேணிக் கொள்ளுங்கள் என்பதாகும்.

இந்த நடுத் தொழுகை யாது என்பது பற்றிப் பலர் பலவிதமாகப் பொருள் கூறியிருக்கிறார்கள். இதுபற்றி மெய்ஞ்ஞானிகளின் கருத்தின்படி இவர்கள்

விரிவுரை எழுதியபோது அதைப்பார்த்த ஒருவர் ஒரு ஆலிமிடம் சென்று இதைப் பற்றி கூறினார்.

அதைக் கேட்ட அந்த ஆலிம் ஆ!! அப்படியா... என்று நேரே கல்வத்து நாயகம் அவர்களிடம் வந்து, “என்ன இப்படி குர்ஆன் வசனத்திற்கு உங்கள் இஷ்டப்படியெல்லாம் எழுதுகிறீர்களாமே” என்று ஆவேசமாக இல்லை, இல்லை, அரைவேக்காட்டுத் தனமாகக் கேட்டார்.

அதற்கு கல்வத்து நாயகம் அவர்கள் புன்முறுவலுடன் அவரைப் பக்கத்தில் அமர வைத்து அவர் புத்திக்கு உரைக்கும்படி விளக்கிக் கூறினார்கள். திரும்பவும் அவர் ஆ!! அப்படியா என்று கேட்கவில்லை. அடக்கமாக அவர்கள் கூறியதைக் கேட்ட அந்த ஆலிமுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவேயில்லை. நான் கற்ற கல்வியே எனக்கு இப்படித் திரையாக வரும் என்று எண்ணிப் பார்க்கவே முடியவில்லையே என்று தமக்குள் எண்ணிக் கொண்டார். அதன்பின் கல்வத்து நாயகம் அவர்களைப் போற்றிப் புகழ்ந்து தள்ளி விட்டார்.

செய்யிது அப்பாஸ் மௌலானா என்பவர்கள் அடிக்கடி கீழக்கரைக்கு வந்து கல்வத்து நாயகம் அவர்களைச் சந்திக்க வருவார். அப்படி வரும்போது ஒரு சமயம் மௌலானா, தாங்கள் கல்வத்து இருக்கும்போது எனக்கு அவசியம் சொல்லி அனுப்ப வேண்டும் நான் வந்து உங்களுக்கு அதுசமயம் ஊழியம் செய்ய வேண்டும் என்றார். அவர்கள் மௌனமாக இருந்து விட்டார்கள்.

செய்யிதுமார்கள் எல்லோரையும் மௌலானா என்றுதான் கூப்பிடவேண்டும். மௌலானா மார்களை நம்மைப் போன்ற சாமான்யர்களுக்கு ஊழியம் செய்ய அனுமதிக்கக் கூடாது. அந்த சாமானியர் எவ்வளவு பெரிய தர்ஜாவில் இருந்தாலும் சரியே. ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு யார் யார் கண்ணியம் செய்கிறார்களோ அவர்கள் அனைவரும் அவர்களின் குடும்பத்தார்களுக்கும் அதாவது செய்யிதுமார்களாகிய மௌலானாமார்களுக்கும் கண்டிப்பாக கண்ணியம் செய்வார்கள். அதோடு அவர்களுக்கு ஊழியம் செய்வதும் நாம் அனைவரது கடமையும் ஆகும். அப்போதுதான் அல்லாஹ்விடம் அவனுடைய ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் நம்மை நேசிப்பார்கள்.

இது கல்வத்து நாயகம் அவர்களுக்குத் தெரியாமலாயிருக்கும். அவசியம் இதற்கு மேலேயே தெரிந்திருக்கும். மௌலானா அவர்களிடம் எப்படி மறுத்துச் சொல்வது என்று அவர்கள் மேல் உள்ள கண்ணியத்தால் மௌனமாக இருந்து விட்டார்கள்.

*(வலம் வருவார்கள்)*

# ஏங்கே பிலால் – ரலி–?

உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் கேட்டார்கள். யா ரசூலல்லாஹ்! பிலாலுடைய பாங்கு சரியில்லை என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். பிலால் “அஷ்ஹது” என்பதற்குப் பதிலாக, “அஸ்ஹது” என்று சொல்கிறார். பிலால் அவர்கள் அப்படித்தான் பாங்கு சொல்லுவார்கள் என்று நபியவர்களுக்கும் தெரியும். உமையா என்பானிடம் பிலால் அவர்கள் அடிமையாக இருந்தபொழுது, அவர்களின் நாவில் நெருப்புக் கங்கை வைத்து வேதனை செய்தான் உமையா. அதிலே பாதிக்கப்பட்ட அவர்களின் நாவிலே ‘ஷீன்’ வராது.

உமரே! அதற்கு என்ன செய்யலாம்? என நபியவர்கள் கேட்டார்கள். யா ரசூலல்லாஹ்! வேறு முஅத்தினை மாற்றிவிடலாம் என்று துணிந்து சொல்லிவிட்டார்கள். இந்த வார்த்தையை வேறு யாரும் சொல்லியிருந்தால் நபியவர்கள் பெரிதாக எடுக்கமாட்டார்கள். உமர் அவர்கள் ஓர் ஆலோசனையைக் கொண்டு வந்தார்கள் என்றால்,அதற்குப் பிறகு அல்லாஹ் அதையே சட்டமாகக் கொண்டு வந்துவிடுவான்.

எனவே, ஒருவேளை இது அல்லாஹ்வின் கருத்தாக இருக்குமோ என நபியவர்கள் எண்ணினார்கள். சரி, கூப்பிடுங்கள் பிலாலை, பிலால் ரலியல்லாஹு அன்ஹு வந்தார்கள். இனி நீங்கள் பாங்கு சொல்ல வேண்டாம் என்று சொன்னவுடன், சரி நாயகமே என்று பிலால் அவர்கள் போய்விட்டார்கள்.

இரவு அனைவரும் தூங்குகிறார்கள். இரவு... நீண்டுகொண்டே செல்கிறது. தஹஜ்ஜத் நேரம் கடந்து வெளிச்சம் வரவேண்டும். நபியவர்கள் வானத்தின் வெளிச்சத்தைப் பார்க்கிறார்கள். வானம் வெளிச்சம் தரவில்லை. மீண்டும் தஹ்பீஹ் செய்கிறார்கள். வெளிச்சம் வரவில்லை. இரவு நீண்டுகொண்ட செல்வதால் உமர் அவர்கள் பயந்தவர்களாக பள்ளியை நோக்கி ஓடிவருகிறார்கள். அல்லாஹ்வின் வஹீயை எதிர்பார்த்து நபியவர்கள் இரண்டு ரகஅத் தொழுதுவிட்டு ஸலாம் கொடுத்தபொழுது, வலது பக்கத்தில் வந்து உட்கார்ந்திருந்தது... “ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம்.”

யா ரசூலல்லாஹ்! இரவு நீண்டுகொண்டே போகிறதே என்றா நினைக்கிறீர்கள். இல்லை நாயகமே, ஒவ்வொரு நேர பிலாலின் பாங்கிற்காக ஒவ்வொரு

மலக்குமார்களும் ஏங்கிக் கிடப்போம் நாயகமே! இனி பிலால் பாங்கு மேடையில் ஏறினால் மட்டுமே பூமியில் பகல். இல்லையென்றால் பகல் இல்லை என்று அல்லாஹ் சொல்லிவிட்டான் நாயகமே! உங்கள் முடிவை மாற்றுங்கள் நாயகமே! சொல்லிவிட்டு ஒரு வார்த்தைச் சொன்னார்கள்.

"யா ரசூலல்லாஹ்! அல்லாஹ் தன் சட்டத்தையே உடைக்கிறான். இனி பிலால் ஸீன் என்று சொன்னாலே, அல்லாஹ்விடம் 'ஷீன்' நாயகமே.!

துடித்துப்போன ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், பிலால் எங்கே? எனத் தேடுகிறார்கள். பிலால் அவர்கள் வீட்டிற்குக் கூடச் செல்லாமல், மஸ்ஜிதுன் நபவியிலே சுஜூதில் அழுதுகொண்டிருக்கிறார்கள். யா அல்லாஹ்! நான் என்ன பாபம் செய்தேன். இந்த உலகத்தில் பாக்கியங்கள் பறிக்கப்படுவதற்கு பாபங்கள் காரணமாக இருக்கும்....

"நாம் விளங்கவேண்டிய விஷயம்,

வெளிக்காரணங்களை வைத்து முடிவு செய்யக் கூடாது! ***(தகவல்: காரிஃ)***

---

## மந்திரிச்சி..

அண்ணாவின் அமைச்சரவையில் கலைஞர் பொதுப்பணி அமைச்சராக இருந்த நேரம்..

கலைஞர் தம் விரலில் புதிய டிசைனில் ஒரு மோதிரம் அணிந்திருந்தார்.

கலைஞரின் நெருங்கிய நண்பர், என்ன மோதிரம் இது? டிஸைன் புதுமையாக உள்ளதே என்றார். அதற்கு கலைஞர், இது மந்திரிச்சிக் கொடுத்த மோதிரம் என்றார்.

நண்பர் அதிர்ந்து போனார். என்ன இது...? நீங்களா மந்திரிச்சுக் கொடுத்த மோதிரத்தை அணிகிறீர்கள் என வியப்புடன் கேட்டார்.

ஆமாயா... நான் மந்திரிச்சி கொடுத்த மோதிரத்தை அணியக் கூடாதா என்றார் கலைஞர்.

நண்பர் எனக்குப் புரியவில்லை என்றார்.

கலைஞர் சொன்னார். இது என் மனைவி மந்திரிச்சி கொடுத்த மோதிரம்...அதனால்தான் அணிந்திருக்கிறேன் என்றார். அதாவது. நான் மந்திரி என்றால் என் மனைவி மந்திரிச்சிதானே என்றார் நகைச்சுவையாக.

# அரைக்காசாயினும்...

**ஒருவர் அரசுப்பணியில் அமர்வதால் கிடைக்கும் நன்மைகள் என்னென்ன??**

- 60 வயது வரை பணப் பாதுகாப்பு.
- வாரத்திற்கு இரண்டு நாட்கள் விடுமுறை.
- மேலும் அரசு விடுமுறை நாட்கள்.
- வருடத்திற்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு. 3 நாட்கள் வரையறுக்கப்பட்ட விடுமுறை.
- நாட்டில் என்ன நடந்தாலும் 31 ஆம் தேதி டாண்ணு சம்பளம்.
- ஒவ்வொரு வருடமும் (6 மாதத்திற்கு ஒருமுறை அகவிலைப்படி.. ஒரு வருடாந்திர ஊதிய உயர்வு)
- பணியில் சேர்ந்த 4 வருடம் முடிந்து விட்டால் வீடு கட்ட... வீடு வாங்க எந்த விதமான ஜாமீனும் இல்லாமல் 40 லட்சம் வரையிலான கடன்.
- சுமார் 10 முதல் 15 வருடங்களில் பச்சை மை கையெழுத்து.
- பணியில் இருக்கும் போது இறந்து விட்டால்... வாரிசு ஒருவருக்கு வேலை. இறந்த அன்று 5 லட்சம் உடனடியாக விடுவிப்பு.
- 10 வருடத்திற்கு ஒருமுறை சம்பளம் மாற்றி அமைப்பு.
- ஓய்வு பெற்ற பின் பல லட்சங்களில் கிடைக்கும் பணப்பலன்கள்.

இவ்வளவு நன்மைகள் இருக்கும் அரசுப் பணியைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்..??

1. முதலில் மனநிலையை தயார் படுத்த வேண்டும்.

2. பல லட்சம் பேர் தேர்வு எழுதினாலும்.. உண்மையான போட்டி என்னது சில ஆயிரம் பேருக்குள்தான்.

3. 10 லட்சம் பேர் தேர்வு எழுதினால் 30 ஆயிரம் பேருக்குள்தான் போட்டி இருக்கும்.

4. பெரும்பாலோர் தேர்வுக்கு முந்தைய 10 நாட்கள் அல்லது ஒரு மாதம் மட்டுமே படித்து விட்டு தேர்வெழுத வருவார்கள்.

5. முறைப்படி படிக்காமலும்... முழுமையான தயாரிப்பு இல்லாமலும்தான் 80% பேர் வருவார்கள்.

6. எனவே தேர்வு எழுத வருபவர்களின் எண்ணிக்கையைப் பார்த்து கவலைப்பட.. பயப்பட வேண்டாம்.

7. எந்தத் தேர்வுக்குத் தயாராகிறீர்களோ... அந்தத் தேர்வின் கடந்த 5 வருட வினாத்தாள்களைத் தேடி எடுத்து.. நிதானமாக படித்துப் பார்த்து தேர்வு பற்றிய தீர்க்கமான.. தெளிவான நிலைப்பாட்டிற்கு வாருங்கள்.

8. தேர்வு தொடர்பான பாடத்திட்டங்களைச் சேகரித்து.. ஆய்வு செய்யுங்கள்.

9. தேர்வு தொடர்பான புத்தகங்களைச் சேகரியுங்கள். புத்தகங்களுக்கான செலவு என்பது சிறு முதலீடு என்று புரிந்து கொள்ளுங்கள்.

10. எழுதப் போகும் தேர்வு தரும் பதவியில் நிச்சயமாக அமர்வேன் என்ற எண்ணத்துடன் படிக்கத் தொடங்குங்கள். தினசரி 7 மணி நேரத்திலிருந்து 8 மணிநேரம் வரை அவசியம் படியுங்கள். தொடர்ச்சியாகப் படிக்காமல் 8 மணிநேரத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து கொண்டு படியுங்கள்.

11. ஏதாவது ஒருநாள் படிக்கவில்லை என்றால்.

“வாசிக்காத நாட்கள்

சுவாசிக்காத நாட்கள்”...!

என நினையுங்கள்.

12. வருடம் முழுவதும் உங்கள் உறவுகளில் ஏதாவது ஒரு சுப நிகழ்ச்சிகள் இருந்து கொண்டேதான் இருக்கும். அரசுப் பணியில் அமர்ந்த பின்புதான் இந்த மாதிரி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வேன் என்ற வைராக்கியத்தை வளர்த்து கொள்ளுங்கள்...

13. தினமும் ஒரு நல்ல செய்தித் தாள்களைப் படிக்கவும். அதில் உள்ள நல்ல விசயங்களைக் குறிப்பு எடுக்கவும்.

14. நிறைவாகப் படித்து அரசுப்பணியில் சேர்வது என்று முடிவெடுத்து விட்டால் அதற்கான பணியை இன்றே தொடங்குங்கள்.

**All The Best & Ready To Race** *(தகவல்: முஃபக்கிர்)*

# வஸீலா

*மௌலவி, அல்ஹாஜ், B.M. ஜியாவுத்தீன் பாகவி ஹள்ரத் அவர்கள்.*
*முதல்வர், மதரஸா சுபுலுஸ்ஸலாம். அய்யம்பேட்டை.*

♦ உமையதுப்னு காலித் அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டது.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம்களில் "ஸஆலீக்" குகளின் பொருட்டால் வெற்றிபெறத் தேடினார்கள் (திர்மிதீ, முஸ்னது அஹ்மது, தப்ரானீ 859)

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்தஜாபுத்துஆ (துஆ ஒப்புக் கொள்ளப்பட்டவர்கள்); அப்படியிருந்தும் அல்லாஹ்வுக்கு நெருக்கமான நன்மக்களை வஸீலாவாக்கி வெற்றியைத்தேடி துஆ செய்துள்ளார்கள் என அறிய முடிகிறது.*

*இந்த ஹதீஸில் வரும் "ஸஆலீக்" என்ற வார்த்தைக்கு பரட்டைத்தலையுடன் அழுக்கு ஆடைகளுடன் (உலக ஆசைகளின்றி) இருப்பவர்கள் என ஹதீஸ்கள் குறிப்பிடுகின்றன.*

♦ அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் பிரயாணம் புறப்படுவதாக இருந்தாலும், பிரயாணத்திலிருந்து திரும்பினாலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ருக்கு வந்து தொழுது துஆச் செய்துவிட்டுத் திரும்புவார்கள். நூல்: இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் முஅத்தா -948.

*பெருமானாரின் பொருட்டால் பிரயாணம் நல்லபடி அமையவேண்டும் என்பது நோக்கம்.*

ஹள்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்ட துஆ:

இறைவா! உனது வழியில் ஷஹீதாகும் வாய்ப்பினைத்தா! எனது மௌத்தை உனது ரஸூலின் ஊரில் (மதீனாவில்) இருக்குமாறு செய்வாயாக! (புகாரீ ஷரீப் 1890)

*நல்லோர் பெரியோர் நெருக்கத்தை நாடி அவர்களின் பக்கத்தில் அடக்கமாக வேண்டுமென விரும்புவதும் ஒரு வஸீலாதான்.*

*அதற்கேற்ப நாயகத்துக்குப் பக்கத்தில் அடக்கமாவதற்காக முன்னதாகவே ஆயிஷா நாயகியிடம் ஹள்ரத் உமர் (ரலி) அவர்கள் அனுமதி வாங்கிக் கொண்டார்கள்*

**புகாரீ ஷரீப் ஹதீஸ் 170.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஒரு ரோமம் என்னிடத்தில் இருப்பது, இந்த உலகம், மற்றும் அதிலுள்ள அனைத்தையும் விட எனக்கு மிக விருப்பமானதாகும் என இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் கூறுகிறார்.

அனஸ் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முடியிறக்கும்போது அதனை முதலில் எடுத்துக் கொள்பவர் ஹள்ரத் அபூதல்ஹா (ரலி) அவர்களே!

*இவையனைத்தும் பரக்கத்தை நாடிச் செய்யப்படும் ஒரு வகை வஸீலாவாகும். அதனால்தான் பெருமானார் பயன்படுத்திய பொருட்கள் ஆதாரே முபாரக்காக இன்றுவரை பாதுகாக்கப்படுகின்றன.*

**புகாரீ ஷரீப் ஹதீஸ் 187-188**

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒளு செய்ததும் மீதமுள்ள தண்ணீரை எடுத்து ஸஹாபிகள் (துங்கள் உடலில்) பூசிக்கொள்வார்கள். ஒருமுறை தண்ணீர் கொண்டு வரச்சொல்லி ஒளு செய்தபின் அதிலே வாய் கொப்பளித்து இதைக் குடியுங்கள். உங்கள் முகங்களிலும் கழுத்துகளிலும் ஊற்றிக்கொள்ளுங்கள் என்றார்கள். இதைக் கவனித்த பெருமானாரின் மனைவியார் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் அந்தத் தண்ணீரில் எனக்கும் கொஞ்சம் மீதம் வையுங்களேன் என்று கேட்டார்கள். அவ்வாறே மிச்சம் வைக்கப்பட்டது.

*பரக்கத்தை நாடிச் செய்த இந்த செயல் மூலம் நமக்கு ஷிஃபா கிடைக்காதா என்னும் வஸீலாவின் நோக்கமும் இருக்கிறது.*

♦ நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலைத் தொழுகையை நிறைவேற்றியதும், மதீனா வாசிகள் தண்ணீர்ப் பாத்திரங்களைக் கொண்டு வருவார்கள். (சமயங்களில் குளிர் காலமாகவும் இருக்கும். அப்போதும்) அந்தப் பாத்திரங்களில் தங்களின் கையை முக்கிக் கொடுப்பார்கள்.

*இன்றைய காலத்தில் தண்ணீர் ஓதிக் கொடுப்பதுபோல மக்கள் அதனை பரக்கத்தாகவும், ஷிஃபாவைத்தருவதாகவும் கருதினார்கள்.*

*(வஸீலா வைத்து வழி தேடுவோம்)*

# என் புனிதப் பிரயாணம் 2

*(அல்ஹாஃபிழ்,ஏ.கே.ஏ.ஷர்புத்தீன் ஃபைஜீ, கோவை)*

அன்பர் அஹ்மது இம்தாதுல்லாஹ் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதுப் பிள்ளைகளில் எமக்கு மிகவும் பிடித்தமானவர். நெருக்கமானவர். துஹ்ஃபத்துல் முர்ஸலா, பேரின்பப்பாதை போன்ற மெய்ஞ்ஞானப் பொக்கிஷங்களை முதன் முதலாக எம் மடியில் தவழச்செய்தவர். மெய்ஞ்ஞானம் சிலிர்த்திடும் மெல்லிய ராகங்களை செவிமடுக்கச் செய்தவர். அன்பில் மகிழும் தியாகி. அப்பாஸ் ஷாஜஹான் மற்றும் கத்தார் முஹம்மது யூசுப் அண்ணன் போன்ற அன்புக்கரங்களோடு கரம் கோர்க்கச் செய்தவர். இங்ஙனம் கொண்ட அந்த நட்பை நான் நேரில் சந்தித்தபோது நான் உணர்ந்தேன்.

அந்தத் தொடர் வண்டி என்னை விட்டுச் செல்லவில்லை. மாறாக, ஆழமான நட்பின் கரத்தில் எம்மை இட்டுச் சென்றது. இப்போது என் பயணம் தொடரும் நட்பின் வழித்தடத்திற்கு மாறியது. அப்போது ஸுப்ஹு ஜமாஅத்திற்கான நேரம் நெருங்கும் அதிகாலை வேளை. திருச்சி விமான நிலையத்தின் அருகில் இருக்கும் ஒரு பள்ளிக்குத் தொழப்புறப்பட்டோம். பள்ளியருகில் கார் நின்றது. இறங்கும்போது நண்பர் அஹ்மது சொன்னார். ஆலிம்சா (என்னை அவர் அன்போடு அழைப்பது.) பள்ளியின் பெயரைப் பார்த்தீர்களா? என்றார். நான் பார்த்தபோது மகிழ்ச்சி பீறிட்டது. காரணம் அந்த மஸ்ஜிதின் பெயர் நூரே முஹம்மதிய்யா ஸுன்னத் வல் ஜமாஅத் பள்ளிவாசல்.

முஹம்மதிய்யா எனப் பெயர் வைப்பதுண்டு. ஆனால் நூரே முஹம்மதிய்யா என்றிருப்பதைப் பார்த்தபோது ஹக்கு வெளிப்பட்ட விதத்தை அப்படியே பெயராக வைத்த உறுதியை எண்ணி இமை சிமிட்டாமல் பார்த்தேன். நூரே முஹம்மதிய்யாவில் நாங்கள் இருவரும் இணைந்து ஸுப்ஹு தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றினோம். தொழவைத்த இமாம் யார் எனத் தெரிய வந்தபோது இன்னும் மகிழ்ச்சி மேலோங்கியது. ஆம்! ஹக்கிய்யத்துல் காதிரிய்யைக் கருவாகக்கொண்டு இயங்கும் யாஸீனிய்யா கலாசாலையில் வார்த்தெடுக்கப்பட்ட யாஸீனிய் பிள்ளை.

தொழுகை முடித்து முன்னிருக்கும் அலமாரியில் ஒய்யாரமாய் இடம் பெற்றிருந்த ‘அல் இக்துத்ததராரீ” எனும் ஹதீதுப் பெட்டகத்தைப் பார்த்த மாத்திரத்தில் தொழுகை முடிந்ததாகவே நான் உணரவில்லை.

எங்கள் பயணம் எதை நோக்கியது என்பதை உணர்த்தும் விதமாகவே இவை அமைந்திருந்தன என்பதை எண்ணியபோது எண்ணியபோது மனம் நிறைவான ஜமாஅத்தாக அது அமைந்தது. திருச்சியில் ஒரு பகுதிக்குள் எங்கள் வாகனம் சென்று ஒரு இல்லத்தின் முன் நின்றது. அந்த வீட்டின் முன் கேட்டைத் திறந்து உள்ளே சென்றோம். எங்கள் வருகையை எதிர்பார்த்து நின்றிருந்த அவர் முகமலர்ந்து அஸ்ஸலாமு அலைக்கும் என வரவேற்றார் வைத்தியர் மாலிக்.... *(பிரயாணம் தொடரும்)*

# ஜம்இய்யத்துல் உலமா பொதுக்குழுக் கூட்டம்.

25.1.2022. செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில், ஜம்இய்யத்துல் உலமாவின் பொதுக்குழுக் கூட்டம் திருச்சி மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி வளாகத்தில் கலீபா. ஆலிம் புலவர்.எஸ்.ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பயீ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஜம்இய்யத்துல் உலமா துணைத்தலைவர் என். ரபீவுத்தீன் ஆலிம் நூரி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, செயலாளர் என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி அவர்கள், புதிய நிர்வாகிகள் பற்றிய அறிக்கை வாசித்தார். தலைவர் உரைக்குப்பின், மறைந்த மாண்பாளர்களான சங்கைமிகு ஏ.மஸ்ஊத் மௌலானா அல்ஹாதீ, கிப்லா ஹள்ரத், தமிழ்மாமணி, என்.அப்துஸ்ஸலாம் ஆலிம் யாஸீனிய், ஹெச். அப்துல் கரீம் ஆலிம் யாஸீனிய், ஆகியோரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முறையே, கலீபா ஆலிம் புலவர், திண்டுக்கல் ஜமால் முஹம்மது பாக்கவி, அல்ஹாஜ். ஜி.ஷர்புத்தீன் ஆலிம் யாஸீனிய் உரை நிகழ்த்தினர். மற்றும் ஹாபிழ். வி.எம். முஹம்மது ஜகரிய்யா யாஸீனிய், ஹாஜா ஷரீப் யாஸீனிய்,மேலூர் காஸீம் ஆலிம், கலீலுர் ரஹ்மான் யாஸீனிய், என். ரபீவுத்தீன் ஆலிம் நூரி, என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஆகியோர் ஜம்இய்யத்துல் உலமாவின் எதிர்கால சேவைகள் பற்றி உரையாற்றினர். தொடக்கத்தில் ஹாபிழ். வி.எம். முஹம்மது ஜகரிய்யா யாஸீனிய் கிராஅத் ஓத, யாஸீனிய் ஆலிம்கள் வஹ்தத்துல் உஜூது பைத் பாடினர்.

தீர்மானங்கள்: 1. மிஉராஜ் இரவில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் ஓதச்செய்த ஓதல்கள் பற்றி சிறு வெளியீடு வெளியிடுவது, 2. ஜம்இய்யத்துல் உலமா சபையை ரினீவல் செய்வது, 3. ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் கிளைச்சபைகளில் நடைபெறும் மாதக் கூட்டங்களில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களிடம் அனுமதிபெற்று, இரண்டு ஆலிம்கள் பங்கேற்பது, 4. உறுப்பினர்களிடம் சந்தாக்களை வசூல் செய்வது, 5. புரவலர்களிடம் ஏற்கனவே அவர்கள் ஒப்புக்கொண்ட நன்கொடைகளை வசூல் செய்வது, 6. கரூர் வைஸ்யா வங்கியில் உள்ள கணக்கை பொருளாளர் ஜி.ஷர்புத்தீன் ஆலிம்– என். ஸயீது முஹம்மது ஆலிம்– பராமரிப்பது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் அனுமதியுடன் கீழ்க்காணும் உறுப்பினர்கள் ஜம்இய்யத்துல் உலமா சபையின் புதிய நிர்வாகிகளாக நியமிக்கப்படுகின்றனர்.

1. கலீபா. ஆலிம் புலவர். (தலைவர்)
2. என். ரபீவுத்தீன் ஆலிம் நூரி (துணைத் தலைவர்)
3. .என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி (செயலாளர்)
4. ஹாபிழ். வி.எம். முஹம்மது ஹஸன் யாஸீனிய். (துணைச் செயலாளர்)
5. ஜி. ஷர்புத்தீன் ஆலிம் யாஸீனிய் (பொருளாளர்)

1. ஹாபிழ். வி.எம். முஹம்மது ஜகரிய்யா யாஸீனிய். 2.கலீலுர் ரஹ்மான் யாஸீனீய், 3.பீர் முஹம்மது யாஸீனிய் . (நிர்வாகக் குழு உறுப்பினர்கள்)

# குடியரசு

**குடியரசு தினம் என்றால் என்ன?**

நமது நாட்டுக்கு எப்போது சுதந்திரம் வந்தது என்று கேட்டால் சின்னக் குழந்தைகூட விடை சொல்லிவிடும்; ஆகஸ்ட் 15 ம் தேதி 1947 என்று. ஆனால் குடியரசு தினம் பற்றிக் கேட்டால் பல பெரியவர்களே சரியாகப் பதில் சொல்ல இயலாமல் முழிப்பார்கள்!!! சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்றால் யாரோ நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள்... அவர்களிடமிருந்து நாம் விடுதலை பெற்று விட்டோம் என்பதை உணர முடிகிறது. மற்றபடி பலருக்கு- அதிலும் குறிப்பாய் பல இளைஞர்களுக்கு குடியரசு பற்றி எதுவும் தெரிவதில்லை!!

இன்றைய பள்ளிகளிலும் மாணவர்களிடமும் தேசப் பற்றை விட மதிப்பெண்கள் பற்றே அதிகம் இருக்கிறது. நம் தாய் தமிழ்மொழிப் பற்றும் தேசப் பற்றும் இளம் தலைமுறையினரிடம் குறைந்து வர யார் காரணம்?

பள்ளியில் ஆசிரியர்களா? வீட்டில் பெற்றோர்களா?

ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக.

யாதும் ஊரே யாவரும் கேளிர்.

போன்ற மொழிகளை நம் பிள்ளைகளுக்கு நாம் கற்பித்துக் கொடுக்க வேண்டும். சுதந்திரப் போராட்ட வீரர்களைச் சொல்லுங்கள் எனக் கேட்டால் காந்தி, நேருவிற்கு மேல் அவர்களால் சொல்ல முடிவதில்லை!!

மறைக்கப்பட்ட இஸ்லாமிய சுதந்திரத் தியாகிகள்??

நேதாஜியை பிரமிக்க வைத்த வள்ளல் ஹபீப் அவர்கள்!!! நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் விடுதலைப் போராட்டத்தில் கிழக்காசியாவில் வாழ்ந்த இஸ்லாமியர்கள் பெரும் பங்கு கொண்டனர். மியான்மரில் (அன்றைய பர்மா) பெரும் வணிகராகக் திகழ்ந்தவர் தான் வள்ளல் ஹபீப் அவர்கள். மிகப் பெரும் கோடீஸ்வரர். நேதாஜி, மியான்மர் சென்ற போது அவர் தம் சொத்துகள் அனைத்தையும் இந்திய நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணம் செய்தார். அதைக் கண்டு நேதாஜி பிரமித்து விட்டார். இதன் பின் கிழக்காசியாவில் நேதாஜி பயணம்

செய்த இடங்களிலெல்லாம் ஹபீபின் வள்ளல் தன்மையைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

'நாட்டைப் பிடித்திருக்கும் பிணி நீங்க ஹபீப் மருந்து தேவை' என்று அவர் பேசிய கூட்டங்களில் எல்லாம் சொல்லலானார். ஹபீபுர் ரஹ்மான், ஷாநவாஸ் கான், கரீம் கனி, மௌலானா கலீலுர்ரஹ்மான், முஹ்யித்தீன் பிச்சை ஆகிய இந்திய முஸ்லிம்கள் நேத்தாஜியின் உதவியாளர்களாக இருந்து நம் சுதந்திர இந்தியாவை உருவாக்க அரும்பணியாற்றினார்கள்!!!

தமிழ்நாட்டில் சத்தியமூர்த்தி, காமராஜ், வ.உ.சி., வ.வே.சு.ஐயர், சுப்ரமண்ய சிவா, பாரதி, வீர வாஞ்சி, கொடி காத்த குமரன், நீலகண்ட பிரம்மசாரி, வேலு நாச்சியார்..... இன்னும் எத்தனையோ வீரர்கள் சுதந்திரத்திற்காக குரல் கொடுத்தவர்கள். இவர்களில் பலர் தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்கள்.

இந்திய அளவில் பார்த்தால் திலகர், கோபாலகிருஷ்ண கோகலே, காந்தி, நேரு, பட்டேல், அம்பேத்கர், பகத்சிங், நேதாஜி, லாலா லஜபதி, ஆச்சார்ய வினோபாபாவே, சித்தரஞ்சன் தாஸ், தாதாபாய் நௌரோஜி... இன்னும் எத்தனையோ பேர் நாட்டு விடுதலைக்காகப் போராடி வாழ்ந்தனர். இவர்களை எவ்வளவு பேர் நினைவில் கொண்டிருக்கிறோம்? ஆசிரியர்கள் நாட்டுப் பற்றை மாணவர்களுக்கு ஊட்டவேண்டும். இந்த வரலாறு தான் வருங்கால சந்ததியினர் நாட்டுப் பற்று கொண்டு நம் நாட்டை உயர்த்த வழிகாட்டும். பெற்றோர்களுக்கும் இதில் பங்கு உண்டு. அன்றாட வாழ்க்கையை தொலைக்காட்சிகளிலேயே தொலைத்து விடுகிறவர்கள் எப்படி இளைஞர்களுக்கு வழிகாட்டுவது?

வேரில் பழுதுகள் இருந்தால் விழுதுகள் வளர்வது எப்படிச் சாத்தியம்?

**மறைக்கப்பட்ட இஸ்லாமிய சுதந்திரத் தியாகிகள்**

மகாத்மாவை அதிர வைத்த உமர் சுப்ஹானி: தேசவிடுதலைக்காகப் போராடும் காங்கிரஸ் பேரியக்கத்தின் பொருளாதார ஆதாரங்களுக்காக நிதி திரட்டும் முயற்சியில் காங்கிரஸ் கமிட்டி முனைந்தது. 1921 மார்ச் 31- ஆம் தேதி விஜயவாடாவில் கூடிய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு கோடி ரூபாய் நிதி என்றும் பெயரிட்டனர். அந்த நிதியில் 60 லட்சத்தை பம்பாயிலும் மீதமுள்ள 40 லட்சத்தை பிற நகரங்களிலும் வசூல் செய்ய வேண்டுமென்று காந்திஜி அறிவித்தார். பம்பாயின் மிகப் பெரிய தொழில் அதிபர்களான ஏ.பி. காட்ரெஜ் மூன்று லட்சமும், ஜெயநாராயணன் இந்து மல்தானி ஐந்து லட்சமும், ஆனந்திலால் இரண்டு லட்சமும் நிதி வழங்கினர். லட்சக்கணக்கில் நிதி திரண்டுகொண்டிருந்த அந்நேரத்தில்

பம்பாயின் மிகப் பெரிய பஞ்சாலையின் அதிபரான உமர் சுப்ஹானி என்ற இஸ்லாமியர் காந்திஜியிடம் நேரில் சென்று, திலகர் நினைவு சுயராஜ்ய நிதிக்காக 'ஒரு கோடி' ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். காசோலையை கையில் வாங்கிய காந்திஜியின் கண்கள் அதில் நிரப்பப்பட்டிருந்த தொகையை வாசித்தபோது ஆச்சரியத்தால் விரிந்தது. காங்கிரஸ் கமிட்டியின் நிதி திரட்டும் திட்டத்தை ஒருவரே நிறைவேற்றித் தருகிறாரே என்ற மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், சுதந்திரப்போராட்ட நிதி என்பதால் அதில் பலரது பங்களிப்பும் இருந்தால்தான் அது சிறப்புடையதாக அமையும் என்று காந்திஜி கருதினார். எனவே அந்த காசோலையை உமர் சுப்ஹானியிடமே திருப்பிக் கொடுத்து, சில லட்சங்களை மட்டும் வழங்குங்கள் என்கிறார். காந்திஜியின் விருப்பப்படி சில லட்சங்களை உமர் சுப்ஹானி வழங்கினார். ஒரு கோடி ரூபாயை திலகர் நினைவு சுயராஜ்ய நிதிக்கு உமர் சுப்ஹானி வழங்க முன்வந்த செய்தி ஆங்கில அரசுக்கு எட்டுகிறது. பம்பாய் மாகாண வைஸ்ராய் உடனடியாக உமர் சுப்ஹானியின் தொழிலை முடக்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்குகிறார். உமர் சுப்ஹானியின் பஞ்சாலையில் உற்பத்தியாகும் பஞ்சை அரசே விற்றுத்தரும் என்று நிர்பந்தப்படுத்தி வாங்கி, மிகக் குறைந்த விலையில் விற்றது. இதனால் உமர் சுபஹானிக்கு ஏற்பட்ட நஷ்டம் மூன்று கோடியே அறுபத்து நான்கு லட்சம். இதனை அவரது சகோதரி பாத்திமா இஸ்மாயில் ஒரு பத்திரிகைப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்நியத் துணி பகிஷ்கரிப்புப் போராட்டம் முனைப்புடன் நடந்து கொண்டிருந்த போது, "அந்நியத் துணிகளை உங்கள் பஞ்சாலைகளில் வைத்து எரியூட்டலாமா?" என்று காந்திஜி கேட்டார். அதற்கு என் பஞ்சாலை இதைவிட வேறு ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படவாப் போகிறது என்று உமர் சுப்ஹானி பதிலளித்திருக்கிறார்.

நமது மன்னர்கள் ஒற்றுமையாய் இல்லாமல் இந்தியாவைச் சிறு சிறு மாநிலங்களாய்ப்பிரித்து ஆண்டதால்தான் ஆங்கிலேயர் இந்த ஒற்றுமை யின்மையைக் காரணம் வைத்து உள்ளே நுழைந்தனர்.

இந்த நிலை திரும்பவும் வராதிருக்க நமது தியாகிகள் வீர வரலாற்றினைக் கூறி இளைய தலைமுறைகளை நாட்டுப்பற்று உள்ளவர்களாக வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் கடமையும் ஆகும்.

முந்நூறு வருடங்கள் பிரிட்டிஷ்காரர்களிடம் நாம் அடிமைகளாய் இருந்தோம்... அந்த முந்நூறு வருடங்கள் முன்பு நம் நாடு எப்படி இருந்தது? முகலாய மன்னர்களின் ஆட்சியின் மிகவும் வளமான செல்வ வளம் நிறைந்த நாடாக சமத்துவம் நிறைந்த நாடாகஇருந்த நம் இந்தியா!!! ஆம் உலகத்தின் உயர் வைரம்

மதிப்பே போட இயலாத கோகினூர் வைரம் நம் நாட்டில் தான் இருந்தது. வெள்ளையர்கள் அதைக் கொள்ளையடித்துச் சென்று விட்டனர் டெல்லி செங்கோட்டை, குதுப்மினார், உலகத்தின் 7 வது அதிசயம் தாஜ்மஹால் இன்னும் பல பல கட்டிடங்கள் அனைத்தும் முகலாய ஆட்சிக்காலத்தில்தான் கட்டப்பட்டவையாகும்.

ஏக இறைவனின் அளவற்ற அருளால் ஏக இறைவனின் அதிக உதவியால் இந்திய சுதந்திர போராட்டக் களத்தில் தலையாயக் கடமையாற்றி சாதனைப்படைத்த சரித்திர நாயகரான இஸ்லாமிய மாவீர சிங்கங்களின் சிறிய சிறப்பான விபரங்கள்:

இந்தியாவின் மூவர்ண தேசியக்கொடியின் வர்ணத்தை உருவாக்கிக் கொடுத்தது யார் என தெரியுமா? ஒரு முஸ்லிம். 1902 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் தலைமை நீதிபதியான மர்ஹூம் பக்ருத்தீன் தயாப்ஜி அவர்களின் மனைவி சுரய்யா தயாப்ஜிதான்!!! இஸ்லாமியர்கள் எது செய்தாலும் திட்டமிட்டு மூடிபோட்டு அள்ளிக்குத்தி அமுக்குவதுதான் நம் நாட்டின் முதன் முதல் முக்கியக் கடமையான ஒன்றாயிற்றே!! அல்லாஹ் போதுமானவன்!!

1. ஆங்கிலேயர்களுக்கு எதிராக முதல் புரட்சிக் குரல் கொடுத்தவர் நவாப் சிராஜத் தௌலா.

2. மைசூர் புலி ஷஹீத் திப்புசுல்தான்.

3. ஹள்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் தெஹ்லவி.

4. ஹள்ரத் ஹாஷ் அப்துல் அஜீஸ் முஹத்திஸ் தெஹ்லவி.

5. ஹள்ரத் சையத் அஹ்மத் ஷஹீத்.

6. ஹள்ரத் மவுலானா விலாயத் அலி சாதிக்பூரி.

7. அபு ஜஃபர் சிராஜுத்தீன் முஹம்மத் பஹதுர்ஷா ஜஃபர்.

8. அல்லாமா ஃபஜ்ல ஹக் கைராபாதி.

9. ஷஹ்ஜாதா ஃபைரோஜ் ஷாஹ்.

10. மவுல்வி முஹம்மத் பாகர் ஷஹீத்.

11. பேகம் ஹஜ்ரத் மஹால்.

12. மவுலானா ஹமதுல்லாஹ் ஷாஹ்.

13. நவாப் கான் பஹாதுர் கான்

14. ஷாஹ் அப்துல் காதிர் லுதியானவி.

15. ஹள்ரத் ஹாஜி இம்தாதுல்லாஹ் முஹாஜிர் மக்கி.

16. ஹள்ரத் மவுலானா ரஹ்மதுல்லா கைரானவி.

17. ஷேகுல் ஹிந்த் ஹஜ்ரத் மவுலானா மஹ்மூதுல் ஹஸன்.

18. ஹள்ரத் மவுலானா உபைதுல்லாஹ ஸிந்தி.

19. ஹள்ரத் மவுலானா அன்வர் ஷாஹ் கஷ்மீரி.

20. மவுலானா பர்கதுல்லாஹ் போபாலி.

21. ஹள்ரத் மவுலானா முஃப்தி கிஃபாயதுல்லாஹ்.

22. ஸஹ்பானுல்.

குடியரசு என்பதற்கு நேரடிப் பொருள் குடிமக்களின் அரசு. அதாவது மக்களாட்சி. மக்கள்– தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தேர்தல் மூலம் தங்களுடைய தலைவனைத் தேர்ந்தெடுத்து அவர்கள் ஆட்சி நடத்தும் நாடுதான் குடியரசு நாடு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எப்படி ஆட்சி செய்ய வேண்டும் என்பதை நிர்ணயிப்பதுதான் அரசியல் அமைப்புச் சட்டம் (Constitution Law).

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தலைமையில் மேதைகள் பலர் சேர்ந்து உருவாக்கிய நமது அரசியல் சட்டம்தான் உலகிலேயே மிக நீளமானதாம். மன்னர் ஆட்சி ஆங்கிலேயர் ஆட்சி எல்லாம் முடிந்து 1947 ஆகஸ்டு 15 ஆம் தேதி சுதந்திரத்தைப் போராடி வாங்கிவிட்டோம்.

அதன் பின் இரண்டரை வருடங்களுக்குப் பிறகு 1950 இல் குடியரசு நாடாக அதாவது மக்களாட்சி நாடாக அறிவிக்கப்பட்டது. சுதந்திர தினத்தைவிட, குடியரசு தினம்தான் முக்கியமானது. ஏனென்றால், மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சரியான ஆட்சி இல்லையெனில் தேர்ந்தெடுத்தவரை நீக்கிவிட்டு வேறொரு நல்ல தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இதையெல்லாம் இளைய தலைமுறை நன்கு அறிந்திருக்குமானால் நாட்டின் எதிர்காலம் வளமுடையதாக ஆகும் என்பது நிச்சயம்.

***தகவல்: இறை அருள் வைத்தியர் மாலிக்.***

---

*ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே*
*அணுவினுக் கணுவாகு ஆனந்தமே*
*மனுநீக்கி யருவாடு ஆனந்தமே*
*ஆனந்தக் கூத்தாடு ஆனந்தமே*

– சங்கைமிகு
செய்கு நாயகம் அவர்கள் –

# அன்னை ஜைனப் பின்த் ஜஹ்ஷ் (ரலி)

ஜைனப் நபிபெருமானாரின் மாமி உமைமாவின் மகளாவார்கள். ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களுள் இவர்களும் ஒருவர். மதீனாவுக்குக் குடியேறிய ஆரம்பகால முஸ்லிம்களில் ஜைனபும் உண்டு.

இந்த ஜைனப் அழகில் சிறந்தவர்கள். இவர்களை நபிபெருமானாரவர்கள் தம்மிடம் அடிமையாக வந்து, தம்மால் விடுதலை செய்யப்பட்டுத் தமது வளர்ப்புப் புதல்வராகிவிட்ட ஜைது இப்னு ஹாரிஸ் என்பவருக்கு மணமுடித்து வைத்தார்கள். உயர்குலமாகக் கருதப்பட்ட குரைஷிக் குலத்தில் தோன்றிய பெண்ணொருத்தி, எங்கிருந்தோ வந்த, அடிமையாகி விடுதலை செய்யப்பட்ட ஒருவரை மணமுடிப்பதென்பது இஸ்லாத்துக்கு முன்னர் அரபு நாட்டில் கற்பனையே செய்து பார்க்க முடியாத விஷயமாகும். எனினும், நபிபெருமானார் இந்த மணத்தை நடத்தி வைத்தார்கள்.

ஆனால், ஜைதுடைய மணவாழ்வு சுகம் தராது போய்விட்டது. அவர் விடுதலை பெற்ற அடிமையாய் இருந்து, தாம் குரைஷிக் குலப் பெண்ணாய் இருந்ததால் அவரைத் தம் கணவராக ஏற்றுப் பணிவிடை செய்வதில் ஜைனப் தயக்கங் காட்டினார்கள். இது குறித்து சில தடவைகளில் ஜைது நபிபெருமானாரிடம் முறையிட்டார். அதன் பின், ஒரு நாள் கோபம் அதிகரித்தவராக அவர் ஜைனபை விவாகரத்துச் செய்துவிட்டார். உயர் குலப்பெண் ஒருவரை அடிமையாய் இருந்து விடுதலையான ஒருவர் இவ்விதம் விவாகரத்துச் செய்து விட்டது கண்டு ஜைனபின் உறவினர் திகைத்துப் போயினர். ஆனால், நபிபெருமானார் ஜைதை அதற்குப் பொறுப்பாளியாக்கவில்லை. அவரிடம் எப்போதும் போலவே அன்புடன் நடந்து கொண்டார்கள்.

ஆனால், ஜைனபின் நிலை மோசமாகிவிட்டது. அடிமையாய் இருந்த ஒருவரை மணந்த அவர்களை எந்த அரபியும் மணக்க முன்வரமாட்டார். இந்த நிலையில் நபிபெருமானாரே தமது அத்தை மகளை ஏற்க வேண்டியதாயிற்று. அக்கால அரபிகளிடையே ஒருவர் தம்முடைய வளர்ப்புப் புதல்வனுடைய மனைவி விவாகரத்துச் செய்யப்பட்டாலும், அவளை அவர் மணக்கக் கூடாது என்ற பழக்கமிருந்து வந்தது.

ஆனால், இந்த இருவரிடையேயும் எந்த ரத்தபந்தமும் இல்லையாதலால் இவ்விதம் மணம் கூடும் என்றது இஸ்லாம்.

நபிபெருமானார் தம்மை மணக்க விரும்புவதாக ஜைனபிடம் செய்தி சொல்லி அனுப்பியபோது, இறைவனுடைய அனுமதியைக் கேளாது தாம் சம்மதமளிக்க முடியாது என்று ஜைனப் நாயகி மொழிந்து விட்டார்கள். அதேபோல் அவர்கள் தொழுது, பிரார்த்தித்தார்கள். அதே சமயம் "(நபியே) ஜைனபை ஜைது விவாகரத்துச் செய்ததும் நாம் உமக்கு அவரை மணம் முடித்து வைத்தோம். இனிமேல், தமது வளர்ப்புப் பிள்ளைகளால் விவாகரத்துச் செய்யப்பட்ட அவர்களின் மனைவியர்களை அந்தப் பிள்ளைகளை வளர்த்தவர்கள் மணப்பது ஆகும். திண்ணமாக, அல்லா(ஹ்)வின் கட்டளைக்கு அடி பணிந்தே ஆகவேண்டும்." (அத். 33: ஆ. 36-39) என்று கருத்துள்ள திருவசனங்கள் இறங்கின. இச்செய்தி ஜைனபிடம் தெரிவிக்கப்பட்டதும் அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள். இறைவனுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

அவர்களை நபிபெருமானார் ஹிஜ்ரி 5 துல்கஃதா மாதத்தில் (சுமார் அவருடைய 35- ஆம் வயதில்) மணந்து கொண்டார்கள். இதற்கு விரிவாக விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ரொட்டியும், கறியும் சமைத்து வைக்கப்பட்டிருந்தன. அனேகமாக ஸஹாபிகள் அனைவருமே வந்து விருந்துண்டனர்.

நபிபெருமானாரின் ஏனைய பிராட்டியார்களை அவர்களுடைய பெற்றோர்களோ சகோதரர்களோ மணமுடித்துக் கொடுத்தனர். ஆனால், ஜைனபின் திருமணமோ இறைவனாலேயே நடத்திவைக்கப்பட்டுவிட்டது. இது குறித்து அவர்கள் பெருமையும் மகிழ்ச்சியுமடைந்திருந்தார்கள்.

ஜைனப் நாயகி தொழுகையிலும், நோன்பிலும் கண்டிப்பான அனுஷ்டானமுடையவர்களாய் இருந்தார்கள். தாமே ஊசி கொண்டு வலைகள் பின்னி விற்று ஜீவனம் செய்தார்கள்.அவர்களுடைய தயாளகுணம் வெகு பிரசித்தியானது. அவர்கள் தமக்கென எதுவும் வைத்துக்கொள்ளாமல் யாவையும் ஏழைகளுக்குக் கொடுத்து விடுவார்கள். நபிபெருமானாரின் இறுதிக் காலத்தில் அவர்களுடைய பிராட்டியார்கள் அவர்களிடம் "எங்களில் முதன் முதலில் உங்களைச் சந்திப்பவர் யார்?" என்று வினவினர். "நீண்ட கையுடையவர்" என்று பெருமானார் பதிலளித்தார்கள். உடனே, அவர்கள் அளவுகோல் ஒன்றை எடுத்துத் தங்களுடைய கைகளை அளந்து பார்த்தனர். சௌதா நாயகியின் கைகளே அதிக நீளமானவையாய் இருந்தன. எனவே, அவர்கள் தான் பெருமானாரை அடுத்து மரணிப்பார் என்று எண்ணினர். ஆனால், பெருமானாரை அடுத்து மரணித்தவர்

ஜைனப் தாம். அப்போதுதான் “நீண்ட கையுடையவர்” என்று பெருமானார் குறிப்பிட்டது கொடையில் மற்றவர்களை மிகைத்தவர்களைத்தான்– அவர்கள் ஜைனபே என்று விளங்கிக் கொண்டனர்.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சியின் போது, ஜைனப் நாயகிக்குப் பன்னிரண்டாயிரம் திர்ஹம் உபகாரச் சம்பளமாகக் கொடுத்தனுப்பினார்கள். ஜைனப் அது சகல பிராட்டியார்களிடையிலும் பங்கிடப்படுவதற்காகத் தமக்கு அனுப்பப்பட்டுள்ளதாக எண்ணிக் கொண்டு, “இதைப் பங்கீடு செய்ய நான் தகுந்தவளல்லள்” என்றார்கள். அப்போது அது அவர்களுக்கு மட்டும் உரியது என்று அவர்களிடம் கூறப்பட்டது. உடனே அதைக் கண்கொண்டு பார்க்காமலே ஒரு மூலையில் கொட்டச் சொன்னார்கள். உடனே தம் உறவினர் ஒருவரை வரவழைத்து அவர் உதவியால் அத்தனையையும் ஏழைகளுக்கும் வறிஞர்களுக்கும் வினியோகிக்கச் செய்து விட்டார்கள். அதன்பின் அவர்கள் தமது கைகளை ஏந்தியவாறு, “இறைவா, இந்தத் தொகை அடுத்த வருடம் எனக்குக் கிடைக்காதிருக்க அருள்செய்!” என்று பிரார்த்தித்தார்கள். அது போன்று அடுத்த வருடம் உபகாரச் சம்பளம் வருமுன் அவர்கள் காலமாகி விட்டார்கள்.

தாம் கொடுத்தனுப்பிய உபகாரச் சம்பளத்தொகை முழுவதையும் ஜைனப் வினியோகித்து விட்டதறிந்த ஹஜ்ரத் உமர் (ரலி) மேலும் ஆயிரம் திர்ஹம் அவர்களுடைய சொந்தச் செலவுக்காகக் கொடுத்தனுப்பினார்கள். அதையும் வாங்கி அவர்கள் ஏழைகளுக்குக் கொடுத்து விட்டார்கள். இவ்விதம் அவர்கள் ஏழைகளுக்கு உதவி வந்ததால் அவர்களுக்கு “மாவல் மஸாக்கீன்” (ஏழைகளின் புகலிடம்) என்று ஒரு பெயர் உண்டாயிற்று.

ஜைனப் பிந்த் ஜஹ்ஷ் நாயகி தமது ஐம்பத்து ஐந்தாம் வயதில் (ஹிஜ்ரி 20– ல்) காலமானார்கள். *(அன்னையரின் அறிமுகம் தொடரும்)*

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபையின் வழிகாட்டுக்குழு உறுப்பினர், மூத்த மார்க்க அறிஞர், பன்னூறு ஆலிம்களின் ஆசிரியர், சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைவழி நின்று அதற்கு சோதனைகள் வந்தபோது அதனைக் காக்கப் பாடுபட்ட தளபதி, திருநெல்வேலி பேட்டை மௌலவி ஸலாஹுத்தீன் ரியாஜி ஹள்ரத் அவர்கள் 28.01.2022. இறையடி சேர்ந்தார்கள் . 29.2.2022 சனிக்கிழமை திருநெல்வேலி பேட்டை மக்தூம் ஞானியார் பள்ளிவாசல் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் அன்னாரின் பிழைகளைப் பொறுத்து சேவைகளை கபூல் செய்து சுவனம் சேர்ப்பானாக! ஆமீன்!

*தொடர் ( 33)*

# இனிக்கும் இறைமொழி

இறையருட் கவிமணி கா. அப்துல் கஃபூர் எம்.ஏ.

## அனாதைக் குதவுதல் அருள் நெறியாகும்

***"அவ்வாறன்று, நீங்கள் அனாதைகளை கண்ணியப்படுத்துவதில்லை"***
***(89 : 17)***

நாம் வாழுகின்ற இவ்வையகம் இயங்குவதற்குக் காரணமாயிருப்பது அன்பேயாகும். "அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்" அனைத்தையும் இயக்குகின்றான். தொடர்புடையாரிடத்துக் காட்டுகின்ற அன்பும், தொடர்பில்லாரிடத்தும் பொழிகின்ற அருளும், பல்வேறு வடிவங்களில் பல்வேறு பெயர்களைப் பெற்றிருக்கின்றன. ஐயாறு மாதம் நம்மைச் சுமந்து பெற்ற அன்னை நம்மீது பாசத்தைப் பொழிகின்றாள். அவையத்து முந்தியிருப்பச் செய்வதிலே நாட்டங்கொண்ட தந்தையும் தண்ணளியைச் சொரிகின்றார். பெற்றோரிடத்துப் பிள்ளைகள் பெருமதிப்பு வைக்கின்றார்கள். இதயங்களின் சங்கமமாகிய காதலும். நண்பர்களிடையே காணப்படுகின்ற நேசமும், குருமார்கள் சீடர்களிடத்திலே காட்டுகின்ற பரிவும், நல்லடியார்கள் இறைவனிடத்திலே காட்டுகின்ற பக்தியும், அன்பின் பல்வேறு வடிவங்களேயாகும். "அன்பின் வழியது உயர்நிலை" என்பது புலவர் கண்ட முடிவு.

உலகத்தின் உயர்படைப்பாகக் கருதப்படுகின்ற மனிதனிடத்தில் மட்டுமின்றி, விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் சின்னஞ்சிறிய புழு, பூச்சிகளிடத்தும் அன்பெனும் பண்பு அமைந்திருக்கக் காணலாம். பறந்துவரும் பருந்தைக் கண்டவுடன் தாய்க்கோழி தன் குஞ்சுகளை இறக்கைக்குள்ளே நாவினால் நக்கிப் பாசத்தை வெளிக்காட்டுகின்றன. "கன்று தேராவின்கனை குரல்" இலக்கியத்தில் இடம் பெற்றுவிடுகின்றது. இளவரசனின் இன்னாச் செயலால் அருமைக் கன்றினை இழந்துவிட்ட தாய்ப்பசு மனுநீதிச் சோழனின் ஆராய்ச்சி மணியை அடித்து நீதி வேண்டி நின்றதாம். பையிலே குட்டியைச் சுமந்து கொண்டு பாய்ந்தோடுகின்ற கங்காரு; வாயிலே குட்டியைக் கௌவிக்கொண்டு வாயிலிலே வந்து நிற்கின்ற பூனை, உடம்பை இறுகப் பற்றியிருக்கின்ற குட்டியுடன் மரக்கிளைகளில் தாவிச் செல்கின்ற மந்தி; தேடிப்பெற்று வந்த இரையினைத் தன் குஞ்சின் வாயிலே ஊட்டுகின்ற சிட்டுக்குருவி, இவைபோன்றவை தாயன்பைத் தரணிக்கெடுத்துக் காட்டுவன.

அவ்வன்பை மாந்தும் குருளைகளும் குட்டிகளும் கன்றுகளும் குஞ்சுகளும் தாயன்பைத் தக்கபடி எதிரொலிப்பதையும் காணலாம்.

அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு பயணத்தின் போது, ஒரு பெண்கழுதை இரு குட்டிகளுடன் நிற்பதைக் கண்ட ஸஹாபாத்தோழர்கள் அக்குட்டிகளை வன்முறையில் எடுத்து வந்தனர். தாய்க்கழுதை தரையிலே கிடந்து புரண்டது, அதன் துயரத்தைக் கண்ட பெருமானாரவர்கள் நடந்ததையறிந்து உடனடியாக அதன் குட்டிகளை விட்டு விடுமாறு பணித்தார்கள். இன்னொரு முறை ஒருவர் கையில் ஒரு பொருளை மறைத்து வைத்துக்கொண்டு கம்பளி போர்த்தியவராகக் கருணை நபியிடம் வந்தார். தாம் வரும் வழியில் ஒரு புதரில் காணப்பட்ட பறவைக் குஞ்சுகளைத் தாம் எடுத்து வந்ததாகவும், தாய்ப்பறவை அதனைக்கண்டு அக்குஞ்சுகளை ஆர்வத்துடன் அணைத்துக் கொண்டதாகவும், அவற்றைக் கையில் கொண்டுவந்திருப்பதாகவும் அருமை நாயகத்திடம் கூறினார். அத்தாய்ப்பறவை தன் குஞ்சுகளை அணைத்தவாறே இருப்பதைக்கண்டு வியப்புற்ற "இப் பறவைக்குத் தன் குஞ்சுகள் மீதுள்ள பாசத்தைவிட இறைவன் தன் படைப்பினத்தின் மீது காட்டுகின்ற பரிவு அதிகமானது" எனச் சொல்லி அப்பறவைகளை முன்பிருந்த இடத்திலேயே விட்டுவிடுமாறு பணித்தார்கள்.

பாருலகில் பிறந்த பின்னர், பேணி வளர்க்கும் பெற்றோர்களை இழந்துவிடும் பிள்ளைகள் அனாதைகளாகிவிடுகின்றனர். உலகில் பிறப்பன அனைத்தும் அழிந்தேயாக வேண்டும். இறப்பு என்பது இவ்வுலகின் நியதி. மரணமென்பது கூரிய வாளைப்போல் எப்போதும் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கிறது. எப்போது அது அறுந்து வீழ்ந்து உயிரைக் குடிக்குமென்பதை உறுதியாகக் கூறமுடியாது. குழந்தைகள் பிறந்தவுடனே அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பெற்றோர்கள் பிரிந்து சென்றுவிட்டால், அடுத்திருப்போர் அவர்களை எவ்வாறு பராமரிக்கிறார் களென்பதை அனைத்தும் வல்ல நாயன் சோதிக்க நாடுகின்றான். இறைவனின் ஆட்சியும் மாட்சியும், அதனுள் அடங்குகின்ற அந்தரங்கங்களும் சாதாரண மக்களால் உணர்ந்து கொள்ள முடியாது.

இறைவனின் இறுதித் தூதராக இவ்வுலகில் தோன்றிய அண்ணல் பெருமானார் அவர்களே பிறப்பதற்கு முன்னர் தந்தையை இழந்தார்கள். பிறந்து ஆறாண்டுகளில் அன்னையையும் இழந்தார்கள். அதற்குப் பின்னர் அருமைப் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள் பேரக்குழந்தையைப் பேணி வளர்த்தார்கள், அவர்களின்

பொறுப்பை ஏற்றெடுப்பதற்குப் பலரும் முன்வந்தனர். பிற்காலத்தில் அபூலஹப் என அழைக்கப்பட்ட அப்துல் உஸ்ஸாவும் தன் இசைவைத் தெரிவித்தான். செல்வச் செருக்குடையோர் செவ்வையாகப் பராமரிக்கமாட்டார் எனக்கருதிய பாட்டனார் அவர்கள், அப்பொறுப்பினைத் தமது புதல்வர் அபுதாலிப் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். தமது தந்தையாரின் தாய்வயிற்றுப் பெரியதந்தையாகிய அபூதாலிப் அவர்களின் மடியிலே பாலர் முஹம்மது சென்று அமர்ந்தபோது பாட்டனாரின் நெஞ்சம் குளிர்ந்தது. அபூதாலிப் அவர்களோ தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குலக் கொழுந்தை பிரியக் குழந்தையாக மட்டுமன்றிப் பிரியாக் குழந்தையாகவும், கருத்தின் குருத்தாகவும், கண்போலப் பேணிக் காத்தார்கள். வணிகத்திற்காக வெளி நாடாகிய சிரியா சென்றபோது பன்னிரு வயதுப் பிராயத்தை அடைந்திருந்த அண்ணலார் அவர்களையும் தம்முடன் அழைத்துச் சென்று வணிகத்துறையிலும் பயிற்சி அளித்தார்கள். சுருங்கக் கூறின், அனாதைகள் அவ்வாறு பராமரிக்கப்பட்டதே ஒரு முன்மாதிரியாக அமைந்து விட்டது. இறைவன் மேற்பார்வையில் இனிதே நிகழ்ந்த இவற்றையெல்லாம் உள்ளடக்கி வான்மறை வழங்குகின்ற வசனம் உள்ளங் கொள்ளத்தக்கது:–

*“அனாதையாக உம்மைக் கண்ட அவன் (உமக்குத்) தங்குமிடமளித்து ஆதரிக்கவில்லையா? திகைத்துத் தயங்கியவராக உம்மைக் கணட அவன், நேரான வழியில் (உம்மைச்) செலுத்தினான். முடைப்பட்டவராக உம்மைக் கண்ட அவன் (உம்மைத்) தனவந்தராக ஆக்கி வைத்தான் (அல்லவா?)” (93 : 6–8)*

பொதுவாகப் பெற்றோர்களின் கண்காணிப்பின்றி வளர்ந்துவரும் பிள்ளைகள், பெரும்பாலும் நன்னெறி தவறித் தீயொழுக்கங்களில் மாட்டிக்கொள்வதும், கல்வி ஞானங்களில் கருத்துச் செலுத்தாது காடுமேடு ஏறுவதும் உலக இயல்பாக இருப்பதைக் காணலாம். ஆனால் அண்ணல் பெருமானார் அவர்கள் அனாதையாக இருந்தும் ஒழுக்க மேம்பாடுகளில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் இலங்குவதும், பள்ளியில் படித்தறியாத நிலையிலிருந்தும் ஞாலத்திற் சிறந்த ஞானக் கோமானாக விளங்குவதும் உலகிலேயே ஒருபுதுமையாக இலங்குகிறது. நெஞ்சையள்ளும் செஞ்சொல் ஓவியமாம் புர்தா ஷரீஃபை யாத்தளித்த மாமேதை இமாம் பூஸரீ (ரஹ்) அவர்கள் இக்கருத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்கள்.

“கஃபாக பில் இல்மி ஃபில் உம்முய்யி முயிஜிஸதன்
ஃபில் ஜாஹிலிய்யதி வத்தஃதீபி ஃபில் யுதுமி”

(ஒரு ஆசானிடத்துக் கல்விப் பயிற்சி பெறாதிருந்தும் தலைசிறந்த மெய்ஞ்ஞானியாகவும், பெற்றோர் துணையின்றியும் யாவரினும் மிக்கநல்லொழுக்க சீலராவும் பெருமானார் அவர்கள் விளங்கிய உண்மையொன்றே, அவர்கள்

இறைவனின் தூதரென்பதற்குப் போதுமான சான்றாகும்.) சிற்றிளம் பருவத்தில் அனாதையாக இருந்த போது, அவர்கள் பாதுகாக்கப்பட்டதும், பருவமடைந்து பாருலக வாழ்க்கையில் ஈடுபட்டபோது அவர்கள் அனாதைகளை ஆதரித்து வந்ததும், அனாதைகளை எவ்வாறு ஆதரிக்க வேண்டுமென்பதற்கு அழகிய முன்மாதிரியாகவே இலங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒளிமிகு மதீனாவில் ஒருநாள் வந்தது பெருநாள். புதுநீராடி புத்தாடை புனைந்து துள்ளிக் குதிக்கும் சிறுவர்கள் சூழ அள்ளிக்கொழிக்கும் மகிழ்ச்சியே பெருக, முஸ்லிம் பெருங்குடி மக்கள் பெருநாள் தொழுகையை நிறைவேற்றச் சென்று கொண்டிருக்கின்றனர். வழியிலே அனாதைச் சிறுவன் ஒருவன் விழிகளில் கண்ணீர் கசிய ஏக்கத்துடன் நின்று கொண்டிருக்கிறான். அவன் தந்தையோ போரிலே வீர மரணம் அடைந்து விட்டார். அவ்வழியே வந்த அண்ணலார் அவர்கள், அச்சிறுவனின் சோகக்கதையைக் கேட்டறிகின்றார்கள். அனைத்துலகுக்குமோர் அருட்கொடையாக வந்துதித்த வள்ளல் நாயகமவர்கள், தினைத்துணையும் தயங்காமல் அச்சிறுவனை தோளிலே தூக்கிவைத்துத் தங்கள் இல்லத்திற்கு அன்பொழுக எடுத்துச்சென்று அழகுபடுத்திப் புத்தாடை புனைந்து தொழுமிடத்திற்கு அழைத்துச் சென்று அவனது கவலையினைக் களைந்தார்கள். காலமெல்லாம் கமழ்கின்ற இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல, நாயக வாழ்வுக்கு நல்லணியாகத் திகழ்கின்றன. நாயகத்தின் வாழ்க்கைத் துணைவியர்களாக அமைந்த நம் பிராட்டிமார்களுள் ஒருவர், அன்னையார் உம்முஸல்மா அவர்களாவர். போரிலே கணவனையிழந்து விட்ட அவர்களுக்கும், அவர்களின் இரு அனாதைக் குழந்தைகளுக்கும் அண்ணலார் அவர்கள் வாழ்வளித்தார்கள். அவர்களைப் பற்றி அவர்களின் பெரிய தந்தை அபூதாலிப் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துகளிலே ஒன்று ‘அவர்கள் காவலற்ற விதவைகட்கும் கதியில்லா அனாதைகட்கும் காவலராக இலங்கிவந்தார்கள்’ என்பதாகும்.

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும், தன் சந்ததிகள் வாழையடி வாழையாக வளமான வாழ்வைப் பெறவேண்டும் என்னும் குறிக்கோளுடனும் சிந்தனையுடனும் காலமெல்லாம் அதற்காகப் பாடுபடுவதிலே காலத்தைக் கடத்துகின்றனர். ஆனால் அண்ணலார் அவர்களோ தங்கள் சமுதாயத்திலுள்ள விதவைகள், அனாதைகள், ஏழைகள் ஆகியோருக்கும் எவ்வாறு வாழ்வளிப்பது என்னும் சிந்தையிலே காலத்தைப் போக்கிச் சிறந்த பொன்மொழிகளையும் சீரிய திட்டங்களையும் வகுத்தளித்துள்ளார்கள். அண்ணலார் அவர்களின் காலத்தில் நிகழ்ந்த தற்காப்புப் போர்களில் பங்கு கொண்டு பலர் இறந்துவிட்டதால், கணவனை இழந்த விதவைகளும்

காப்பாளிக்கப்படவேண்டிய அனாதைகளும் மிகுந்தனர். அதனால் அண்ணலார் அவர்களின் பொறுப்பும் மிகுந்தது.

ஒருபோது அண்ணலார் அவர்கள் தங்கள் ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் சிறிது இடைவிட்டுச் சேர்த்துக் காட்டி “நானும்ஒரு அனாதைக் குழந்தையை பரிபாலிப்பவரும் சுவனத்தில் இவ்வாறிருப்போம்” என்று மொழிந்தார்கள். இன்னொரு தருணத்தில் “ஓர் அனாதைக் குழந்தையின் தலையை ஒருவர் தடவிக் கொடுத்தால்– அவர் தடவிக் கொடுத்தல் அல்லாஹ்வின் பொருட்டாகவே இருந்தால்– அவர் கைபடும் ஒவ்வோர் உரோமத்திற்கும் அவருக்குப் பல நன்மைகள் கிடைக்கும்” என நவின்றுள்ளார்கள். “உங்களது குழந்தைகளை நடத்துவது போல் அனாதைக் குழந்தைகளையும் நடத்துவீர்களாக. மேலும் நீங்கள் உண்ணுவதிலிருந்தே அவர்களுக்கும் உணவளிப்பீர்களாக”. “ஒருவர் ஒரு அனாதைக் குழந்தைக்கு உண்ண உணவும் தாகம் தீரத் தண்ணீரும் வழங்கி ஆதரித்தால், அல்லாஹ் அவருக்கு சுவனபதியை உரிமையாக்குவான், மன்னிக்க முடியாத பாவம் செய்திருந்தாலொழிய” என்பன போன்ற நாயக நன்மொழிகள் நம் நெஞ்சங்களைக் கனிவிக்கின்றன.

மலர் போன்ற முகங்களையும் பிஞ்சு நெஞ்சங்களையும் கொண்ட ஆதரவற்ற அனாதைகளுக்கு நாம் நீட்டுகின்ற அன்புக் கரமும் ஆதரவாக உதிர்க்கின்ற கனி மொழிகளும் அவர்களின் ஏக்கத்தைப் போக்கி ஊக்கத்தை ஊட்டுகின்றன. சிற்றிளம் பருவத்திலேயே அனாதைகளின் சிந்தையில் காயம் ஏற்பட்டு விட்டால் அவை கருகிய மொட்டுகளாகவே மாறிவிடும். ஆகவே, அவர்களை நல்லமுறையிலே நடத்துகின்ற வீட்டை முஸ்லிம்களின் இல்லங்களில் மிகச் சிறந்ததாகவும், அவர்களைத் துன்புறுத்துகின்ற வீட்டை முஸ்லிம்களின் இல்லங்களில் மிகக் கெட்டதாகவும், நாயகக் கோமான் அவர்கள் கணித்துள்ளார்கள். பாதுகாக்கப்பட வேண்டிய சிற்றிளம் பருவத்தில் தனது அன்னையையோ அல்லது தந்தையையோ அல்லது இருவரையுமோ இழந்துவிடும் ஆதரவற்ற நிலையிலிருப்போரே அனாதைகளாவர். அவர்களில் வசதிபடைத்த வரும் இருக்கலாம்; வறுமை வாய்ப்பட்டோரும் இருக்கலாம். வறுமைக்குள்ளான ஏழை அனாதைகளை ஆதரித்துக் காப்பாற்றுவதும் வசதி வாய்ப்புடையோரின் சொத்துக்களை நீதி நேர்மை தவறாமல் பரிபாலித்துத் தக்க பருவம் அடைந்தவுடன் அவர்களிடம் ஒப்படைப்பதும் சமுதாயத்தின் கடமையாகும். இவ்விரு வகையினரையும் ஆதரித்துக் காப்பாற்றுவதன் அவசியத்தையும் உயர்வையும் அருள்மறையானது பல இடங்களில் தெளிவாகக் காட்டுகின்றது.

**(இனிமை பரவும்)**

# மா மன்னர் அவ்ரங்கஜீப்!

**ஔரங்கசீப் அவர்களின் சர்ஜிகல் அட்டாக்.**

சிவனின் இருப்பிடமான கைலாஷ் மானசரோவர் சீனாவின் ஆதிக்கத்தில் உள்ளது.

நம் நாட்டு விடுதலைக்குப் பிறகு, சீனா கைலாஷ் பர்வத் (கைலாசமலை) அல்லது கைலாஷ் மானசரோவர் மற்றும் அருணாசலப் பிரதேசத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்ததால் அப்போது பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு ஐ.நா அவைக்குச் சென்று, "சீனா எங்கள் பகுதியை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்துள்ளது, எங்கள் பகுதியை மீண்டும் எங்களுக்குப் பெற்றுத் தாருங்கள்" என்றார்.

இதற்குச் சீனா தரப்பிடமிருந்து வந்த பதில்: "நாங்கள் இந்தியாவின் பகுதியை ஆக்கிரமிக்கவில்லை. எங்கள் நாட்டின் பகுதியை 1680 ல் இந்தியாவை ஆண்ட பேரரசர் பிடுங்கியதை நாங்கள் திரும்ப எடுத்துக் கொண்டோம்."

இந்த பதில் இன்றும் ஐ.நா அவையின் அதிகாரப்பூர்வ ஆவணங்களில் உள்ளது.

சீனா எந்த இந்தியப் பேரரசரின் பெயரை குறிப்பிட்டது தெரியுமா?

"ஔரங்சேப்– **Aurangzeb**"

உண்மையில் ஔரங்சேப் காலத்திலும் சீனாதான் இந்தியப் பகுதியை ஆக்கிரமித்தது. இதைக் குறித்து பேரரசர் ஔரங்சேப், அப்போதைய சீன நாட்டின் சிங் வம்ச **(Ching dynasty)** மன்னர் முதலாம் ஷுன்ஜிக்கு **(Shunji)** எழுதிய கடிதத்தில், "கைலாஷ் மானசரோவர் இந்தியாவின் ஒரு பகுதி. அது மட்டுமின்றி, அது எங்கள் இந்து சகோதரர்களுக்குப் புனிதமான இடம். எனவே, அந்த இடத்தை விட்டுவிலகுங்கள்" என எழுதினார்.

கடிதம் எழுதி ஒன்றரை மாதமாகியும் சீன தரப்பிடமிருந்து பதில் இல்லாததால் குமாவோன் பகுதி அரசர் பாஜ் பஹதூர் சந்த் அவர்களின் படையும் இணைந்து குமாவோன் வழியாக மலையேறிச் சென்று சீனாவைத் தாக்கி, கைலாஷ் மானசரோவர் பகுதியை இந்தியாவுடன் மீண்டும் இணைத்தார்.

எந்தப் பேரரசர் ஔரங்ஜீப் அவர்களை தீவிர இஸ்லாமிய அரசர் என்றும், இந்துக்களுக்கு எதிரானவர் என்றும் பரப்புரை செய்யப்படுகிறதோ அதே பேரரசர்தான், அவர்தான் இந்தியாவின் முதல் உண்மையான சர்ஜிகல் ஸ்டிரைக் நடத்தியவர்.

வரலாற்றின் இந்தப் பக்கங்கள், இந்தியா விடுதலை அடைந்த காலத்து ஐ.நா அவையின் ஆவணங்களில் உள்ளன. அது மட்டுமின்றி அந்த ஆவணங்கள் நாடாளுமன்றத்திலும் பாதுகாப்பாக உள்ளன.

அந்த வரலாற்றுச் சம்பவங்களை நீங்கள் கீழ்க்கண்ட புத்தகங்களிலும் காணலாம்.

ஹிஸ்டரி ஆஃப் உத்தராஞ்சல்– உத்தராஞ்சல் வரலாறு.

ஆசிரியர்: ஓ.சி. ஹாண்டா. மற்றும் த டிராஜிடி ஆஃப் திபத்– திபத்தின் துயரம் (அல்லது சோகமுடிவு). ஆசிரியர்: மன்மோஹன் ஷர்மா. பதிவு: **Meenakshi Sundaram.** தகவல் உதவி: ஜனாப். முக்தார் அஹ்மது அவர்கள்...

---

**இமாம் சஃதீ சீராஜி (ரஹ்) கூறுகிறார்கள்:**

நீங்கள் என்னிடத்தில் ஏதாவது குறைகளைக்கண்டால். அதனை என்னிடத்தில் தெரியப்படுத்துங்கள். ஏனெனில் என் குறையை என்னைத்தவிர வேறு எவரும் சரி செய்ய முடியாது.

என் குறையை என்னிடம் நீங்கள் கூறினால் அது உபதேசமாகும். அதற்காக உங்களுக்கு நன்மை எழுதப்படுகிறது. மாறாக என் குறையை மற்றவர்களிடம் கூறினால் அது புறம் பேசுவதாகும். அதற்காக உங்களுக்குத் தீமை எழுதப்படுகிறது.

---

**வாழ்க்கை மேடுகளும் பள்ளங்களும் நிறைந்தது.**

**மேடுகளில் ஏறும்போது ரசித்தபடி ஏறுங்கள்.**

**பள்ளங்களில் இநங்கும்போது மன வலிமையுடன் இறங்குங்கள்!**

---

*சற்றே நகுக!*

கணவன்: பக்கத்து வீட்டுக்காரன் சரியான லூஸா இருப்பான் போல...

மனைவி:ஏன்...என்னாச்சு?

கணவன்; நான் ஹேப்பி பொங்கல்னு சொன்னா...அவன் ஹேப்பி இட்லின்னு சொல்லிட்டுப் போறான்..

*தொடர்......*

# இஸ்லாத்தின் உண்மை...

*வழுத்தூர், அஸ்ஸையித். முஹம்மது தாஹிர் பாவா வலிய்யுல்லாஹ் ஹஸனீ, காதிரீ (ரலி) அவர்களின் சுயம்பிரகாசம் நூலிலிருந்து..*

## கடவுள் செயல்

1. கடவுள் ஒளியுமல்ல; இருளுமல்ல! அவர் அஞ்ஞானமில்லாத அறிவில் நின்றும், அஞ்ஞானமாகிய இருளை வெளிப்படுத்தி அதில் நின்றும் அஞ்ஞானமுள்ள அறிவாகிய ஒளியை வெளிப்படுத்தினார். இருளை நாம் கடக்காவிட்டால் அவர் உண்மை விளங்காது. ஆகையால், நம் அறிவு அஞ்ஞானமும், மெஞ்ஞானமுமாகிய இரண்டு அம்சத்தை உடையது. பார்வை அறிவின் அம்சமாயிருப்பதால் தன் அம்சமாகிய ஒளியில்லாமல் பார்க்காது!

2. எந்தப் புலனும் ஆன்ம மின்சாரமாகிய மனோ காந்தக்கவர்ச்சியின் ஒலியில்லாமல் ஒன்றையும் எட்டிக்கொள்ளாது. பசுமையாகிய இலைகளையுடைய மரங்களானவை கூர்மையான அறிவின் பார்வைக்கு ஒவ்வோர் இலையும் கடவுளை அறியும் ஏடுகளாய் இருக்கின்றன. துஷ்ட மிருகங்கள் கொலை செய்வதால் குற்றம் செய்த பாவி அல்ல; கடவுளின் நாட்டத்தை அவை நிறைவேற்றுகின்றன.

குறிப்பு: "கடவுளின் அம்சமோ இச்சை மயமாகவும், ஆத்மாவின் அம்சமோ பார்வையின் மயமாகவும், மனதின் அம்சமோ அறிவின் மயமாகவும், ஆகாயத்தின் அம்சமோ தத்துவ மயமாகவும், எல்லா வஸ்துக்களிலும் விளங்கும் இச்சை மயத்தைத் தத்துவ ஞானிகள் கவர்ச்சித் தத்துவமென்றும் சொல்வார்கள். இந்தத் தத்துவமோ பிராணிகளில் காமமாகவும், தாவர வஸ்துக்களில் சத்தாகவும், நிரச வஸ்துக்களில் கவர்ச்சித் தத்துவமாகவும் விளங்கும். எல்லா எண்ணங்களிலும், எல்லாத் தத்துவங்களிலும் எல்லா பொருட்களிலும் கடவுளின் சம்பந்தமுண்டாயிருக்கும்."

3. அவ்வாறே புலன்கள் எட்டிக் கொள்வதெல்லாம் பாவமல்ல. அதிலும் அனேக நன்மைகள் இருக்கின்றன. அதை நியாயமில்லாத வழியில் செலவு செய்வதே பாவம்.அறிவாளிகள் அறிவுக்குமாற்றமாய்நடப்பதே பாவம். **அடிமையாயிருப்பதை அறிந்தது போல் ஆண்டவனாயிருப்பதை அறியாமல் போனதே பாவம்.**

4. ரூப சாஸ்திரம் பொய்யல்ல. ரூபத்தைப் பார்த்து குணங்களை அறியலாம். சிருஷ்டிப் பொருட்களின் ரூபத்தில் கடவுளின் வாக்கியம் கொத்தப்பட்டிருக்கின்றது. அதை அறிவின் கண்ணைக் கொண்டு வாசிக்கலாம்! கடவுளின் செயலின் ஏட்டில் மாமிசம் புசிக்கக்கூடிய பக்ஷிகளுக்கும் மிருகங்களுக்குமுள்ள வீரம் மற்றப் பிராணிகளில் காணப்படவில்லை. எப்போதும் மரக்கறியே புசிப்பது கோழைத்தனத்திற்குக் காரணமாகும். ஆகையால், ஒரே வஸ்தை அளவுக்கு மீறி சாப்பிடக்கூடாது!

5. நம்மைக் கொல்ல வந்த பிராணிகளையும், நம்மை ஹிம்சிக்கும் ஜந்துக்களையும் கொல்வது குற்றமல்ல. நாம் நடமாடும் இடங்களில் அதைக்கண்டால் வதைக்கலாம். ஆனால், அதையும் கடவுள் அம்சமென்று உறுதியாய்க் கண்டவர்களை அது ஹிம்சிக்கிறது இல்லை! நம் வயிற்றிலுள்ள கிருமிகளையும், தலையிலுள்ள பேன்களையும் கொல்வது ஆகும்.

6. கஸ்தூரிக்காக மானையும், முத்துக்காகச் சிப்பிகளையும் தேனுக்காக ஈக்களையும், பட்டுக்காகப் பூச்சிகளையும் கொல்வது குற்றமல்ல. கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள சுவாதீனம் மற்ற எந்த வஸ்துக்குமில்லை. எல்லாம் இவனுக்கே உள்ளது. இவன் சுயநலத்தைக் காட்டவுமில்லை; ஜீவ வதை செய்யவுமில்லை. கடவுளின் அதிகாரத்தைப் பூலோகத்தில் செலுத்துகிறான். அவர் கட்டளையை நிறைவேற்றுகிறான்.

7. அறிவாளிகள் தீங்கு செய்யமாட்டார்கள். மிருகத்தைப்போல் காட்டு மிலேச்சர்களாயிருப்பவர்களே தீங்கு செய்வார்கள்! கடவுளை அவர்கள் அறியாததால் நன்மை செய்யமாட்டார்கள். அவர்கள் தீங்கை அடக்கு முறையால் கண்டிக்க வேண்டும். அடக்கு முறையில் ஞானமில்லாத மிருகத்தன்மை யுள்ளவர்கள் இருக்கக் கூடாது. சிலர் ஞானமில்லாமல் மிருகத்தன்மையால் சட்ட நிரூபர்களாயிருந்ததால் உலகத்தில் அனேக தீங்குகள் விளைகின்றன!

8. ஞான விசுவாசமுள்ளவர்கள் பாவிகளாயிருந்தால் நரகத்தில் அவர்கள் ரூபம் மாற்றப்பட்டிராது. மற்றவர்களை மாற்றப்பட்டிருக்கும். ஞான விஸ்வாச மற்றவன் நன்மைகளைச் செய்திருந்தால் சொர்க்கத்தில் தாழ்ந்த பதவியி லிருப்பான். நன்மையும் தீமையுமற்ற ஞானிகள் கடவுளிடம் இருப்பார்கள். சிறு குழந்தைகளையும் குழந்தையிலேயே பைத்தியம் பிடித்தவர்களையும் திருப்பப்படுகின்றன.

9. நரகத்திலும் சொர்க்கத்திலுங்கூட திரும்புதலுண்டு. எவன் கடவுள் அரூப அம்சத்தையடைந்து தன்னைக் கடவுளாகப் பெற்றுக் கொண்டானோ அவனைத்தவிர மற்றவர்களுக்குத் திரும்புதல் உண்டு. நரகத்தில் கோபத்தால் கொலை செய்தவர்களைப் புலியாகவும், தந்திரத்தால் வஞ்சிப்பர்களை நரியாகவும், திருட்டுத்தனம் உள்ளவர்களைப் பெருச்சாளியாகவும், மூடத்தனமான செய்கையுடையவர்களை மாடு அல்லது கழுதையாகவும், குறும்புத்தனமாகத் துஷ்டதனமுள்ளவர்களைக் குரங்காகவும், நன்றியில்லாதவர்களைக் குதிரையாகவும், கொடிய கோபமுள்ளவர்களை ஒட்டகையாகவும், பேராசையுள்ளவர்களை யானையாகவும், நீசத்தனமான செய்கைகளை உடையவர்களை பன்றியாகவும், கேவலப் புத்தியுடையவர்களை நாயாகவும், அநியாயக்காரர்களை ஓநாயாகவும், ஒருவன் பொருளை நியாயமில்லாமல் அபகரிக்கிறவனை பருந்தாகவும் மாற்றப்பட்டிருக்கும்.

10. அவரவர்கள் குணம், செயலுக்குத் தக்கபடி மிருக ரூபங்களில் வசிப்பார்கள். பிராணிகளில் கேவலமான புழுக்களாகவும், புல், பூண்டுகளில் கேவலமான பாசியாகவும், இதைவிடக் கேவலமான மண்ணாகவும் இருப்பார்கள். பாவம் செய்யாமலிருப்பதே உபவாசம். கடவுளுக்கு வழிபடுவதே தபம். சில தேசத்தார் செயல்– சில தேசத்தார்களுக்கு அநாகரீகமாகவும், சில மதத்தார் சொல்– சில மதத்தாருக்கு நியாய விரோதமாகவும் தோன்றும். உனக்கு எது அழகாகவும், நியாயமாகவும் தோன்றுகின்றதோ அதையே எடுத்துக்கொள்! (குறிப்பு: **“உண்மையை அறிவது ஞானம்; உண்மையை நம்புவது பக்தி; உண்மையில் நடப்பது (ஒழுகுதல்) மார்க்கம். இதையே இல்மு, ஈமான், இஸ்லாம்** எனப்படும். இதுவே பொதுவானது. பாரபக்ஷமில்லாதது! எல்லோராலும் அனுசரிக்கக் கடமைப்பட்டது.”)

11. எவ்வளவு சிருஷ்டிப் பொருட்கள் உலகத்தில் உண்டாயிருக்கிறதோ அவ்வளவு செயல்களும், எண்ணங்களும் நமக்குண்டு. கடவுள் உலகத்தில் அனேக பெரிய ஆவிகளைப் படைத்திருக்கிறார்! அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிரகங்களுக்கும் உயிராய் இருந்து அவற்றை நடத்தி வருகின்றன. எல்லாவற்றிற்கும் பெரிய ஆவியே பரிசுத்த ஆவி (ஜிப்ரீல்). இந்த ஆவிகளைக் கொண்டு நமக்கு சம்பந்தமுண்டானால் அனேக சக்திகள் நம்மில் நூதனமாக விளங்கும். நீ உன் விகாசத்தை விரிவாக்கு! அவர்கள் சம்பந்தத்தைப் பெற்றுக்கொள்!

12. பூமி மட்டும் அழிவது சின்ன அழிவு. கடவுள் உண்மையைத் தவிர எல்லா கிரகங்களும், வஸ்துக்களும் அழிவதே பெரிய அழிவு. இதன் காலத்தைக் கணிக்க

முடியாது. மனிதன் தன் விகாசங்களைக் கடந்து பூரண அரூப அம்ஸத்தை அடைந்து, நூதன சிருஷ்டிப் பொருட்களுக்குக் கடவுளாக வந்து, அவர் அதிகாரம் இவன் பேரில் செல்லாமல் இவன் அவராகவே, அவர் அருப அம்சமாகவே ஆகிக்கொள்வதையே பெரிய அழிவென்று சொல்லப்படும். பூலோகம் அழிவதற்கு முன்னேயே மனிதன் இந்தப் பதவிக்கு ஆளாகலாம்!

13. மரித்த ஆவிகள் அணிந்திருக்கும் உடைகளைத் துண்டித்துக் கொண்டால் அஃது எப்படி கொஞ்ச நேரத்தில் புகைந்து காணாமல் போகிறதோ அவ்வாறே "பயாஸ்கோப்பில்" காணும் காட்சியைப்போல் வெளியாயிருக்கிற நரகம் சொர்க்கங்களும், மற்றெல்லா உலகங்களும் சொற்ப நேரத்தில் புகைந்து ஆவியாகிப் பரிணமிக்க தக்கது. எல்லாம் சுத்தப் பொய். கடவுள் உண்மையே மெய்!

14. முந்தின பதவியில் நாம் முயற்சித்து நமக்கு கைகூடாமற்போனது இந்தப் பதவியில் கைகூடுகின்றது. இந்தப்பதவியில் கைகூடாமல் போனது அடுத்த பதவியில் கைகூடும். நம் ஆசைகளெல்லாம் நிறைவேறாமல் நாம் மரணத்தை விரும்பாமல் அதற்குப் பயந்தவர்களாயிருக்க நம்மை வலுவந்தமாக நம்மை அறியாமல் கொண்டுபோகப்படுகிறது. ஆகையால், இது நமக்குக் கடைசி ஸ்தானமாகாது. சொர்க்கவாதிகள் நன்மை செய்வார்கள். நரகவாதிகள் தீமை செய்வார்கள். பூமியிலுள்ளவர்கள் இரண்டையும் செய்வார்கள். ஞானிகளுக்கோ இரண்டுமில்லை. இவர்களுக்குத் தீமையோ இரும்பு விலங்கு. நன்மையோ தங்க விலங்கு! இவர்களுக்குக் கடவுளைத்தவிர ஒன்றும் தெரியாது.

15. இறந்தவன் உடனே பிறக்கிறதும், நரகம் அல்லது சொர்க்கம் புகுவதுமில்லை. ஆத்ம சம்பந்தம் அல்லது சூட்சும சம்பந்தமான நரகம் அல்லது சொர்க்கத்தை அனுபவிப்பான். இது அவன் கொள்கை விஸ்வாசத்திற்கும் செயலுக்கும் தக்கபடி ஏற்படும். ஒரு மனிதனைப் பாம்பு கடிக்குமானால் அவனைப் பாம்பு உபத்திரவப்படுத்தினதாக நினைப்பாய்; பாம்போ அவனைக் கடித்துவிட்டுப் போய்விட்டது. பின்பு அவனை விஷம் உபத்திரவப்படுத்தினதாக நினைப்பாய். விஷமோ அவன் சரீரத்தில் தாவியும், அதன் உணர்ச்சி இல்லாவிட்டால் ஒன்றும் செய்யாது. இன்பமும் துன்பமும் அறிவினாலேயே உண்டாகின்றன. ஆகையால் நம் அறிவிலேயே பாம்பு, தேள், நெருப்பு இன்றி- பாம்பு, தேள், நெருப்பின் வேதனையும், கனிவர்க்கம், பெண், உணவு இன்றி- கனி வர்க்கம், பெண், உணவின் இன்பத்தையும் காட்டப்படும். *(பிரகாசிக்கும்)*

---

**மறைஞானப்பேழை சந்தாவைப் புதுப்பித்து விட்டீர்களா?**



# மதுரஸா

# நன்கொடை



**திண்டுக்கல்**

திண்டுக்கல் **M.** ஜாகிர் அலிய் **S/O** ஹாஜி **J.** முஹம்மது ரஹ்மத்துல்லா குடும்பத்தினர் அனைவரும், கொடிய நோய்கள், விபத்து மற்றும் எதிர்பாராத ஆபத்துகளிலிருந்து புனித தர்பாரின் பரிபூரணப் பாதுகாப்பு வேண்டி துஆ செய்ய ரூ. 5000 /– ம், அன்னாருடைய மாமியார் நோயிலிருந்து பூரண குணமாகி நலமுடன் வாழ நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 5000 /– ம், அன்னார் விரைவில் அமெரிக்கா செல்ல நிய்யத் வைத்து துஆ செய்ய ரூ. 10000 /– ம்,

உத்தம பாளையம் கலந்தர் 2021 டிசம்பர் மாத நன்கொடை ரூ. 700 /–ம்,

உத்தமபாளையம் அப்துல் ஜப்பார் 2021 டிசம்பர் மாத நன்கொடை ரூ. 500/–ம்

உத்தமபாளையம் மெஹராஜ் 2021 டிசம்பர் மாத நன்கொடை ரூ. 1000 /– ம்,

உத்தமபாளையம் சலீமா பேகம் 2021 டிசம்பர் மாத நன்கொடை ரூ. 500/ – ம்,

சென்னை **S.** சர்மிளா உசேன் துஆ செய்ய சதக்கா ரூ. 300 /– ம் + உணவுக்காக சதக்கா ரூ. 1000 /– ம் + சதக்கா ரூ. 500 /– ம் + மாணவர்கள் உணவுக்காக ரூ. 1600 /– ம்,

எலந்தங்குடி நவ்சாத் அலி தமது அக்காள் மகளின் சுகப்பிரவசத்திற்கு துஆ செய்ய நன்கொடை ரூ.10000/–ம்,

மயிலாடுதுறை ரஜபுனிஸா லியாகத் அலி தமது மகள் சுகப்பிரவசத்திற்கு துஆ செய்ய நன்கொடை ரூ.2000/–ம்,

தஞ்சாவூர் முஹம்மது ஃபாரூக், மற்றும் ஆயிஷா ஃபாரூக் மதுரஸா வுக்கு நன்கொடை ரூ.2000/–ம்,

நாச்சிகுளம் நத்தர்ஷா அவர்களின் மகள் ஜீனத் நலம்பெற வேண்டி துஆ செய்ய ரூ. 500 /– ம்,

ஹைதராபாத் சனோபர் நிஷா **D/O** சர்மிளா உசேன் ஹாஜத் நிறைவேற துஆ செய்ய உணவுக்காக ரூ. 1000 /– ம்,

மதுரை **S.** சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000 /- ம், + துஆ செய்ய சதக்கா ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் **J.** முஹம்மது நஜ்முத்தீன் **B.Sc** நிய்யத்படி துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

காரைக்கால் **R.A.** அப்துல் பாரூக் பாத்திமா குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 500 /- ம்,

ஈரோடு **M.** அப்துல் கரீம் நாட்டங்கள் நிறைவேற நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500 /- ம்,

பாக்கம் கோட்டூர் அப்துல் அஜீஸ் COVID டெஸ்டில் நெகடிவ் வரவும் உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 500 /- ம்,

பாக்கம் கோட்டூர் பரக்கத் நிஷா முஜிபுர் ரஹ்மான் ஹாஜத்துக்கள் நிறைவேற துஆ செய்ய ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் ஸ்டார் மளிகை கடை ஹாஜி **J.M.R.** மூலம் உண்டியல் சேமிப்பு ரூ. 1047 /- ம்,

திண்டுக்கல் **J.** பதுருத்தீன் ஜொகாராம்மாள் நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் **R.M.** காலனி சபியாம்மா குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ நாகூர் பாதுஷா நாயகம் அவர்களுக்கு மவ்லிது ஓதி துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

படமாத்தூர் ஆமினா பீவீ அவர்கள் மூலம் மர்ஹூம் ஜமால் ஆயிஷா- மர்ஹூம் முஹம்மது அலியார்- மர்ஹூம் ஷாகுல் ஹமீது மூன்று பேருக்கும் வருட பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000 /- ம்,

திண்டுக்கல் காந்திகிராமம் **N.** பத்தூல் குடும்பம் சதக்கா ரூ. 2500 / - ம்,

திண்டுக்கல் காந்திகிராமம் **S.** மஹபூப் பாஷா சதக்கா ரூ. 500 /- ம்,

திண்டுக்கல் காந்திகிராமம் சித்திக்கா அம்மாள் சதக்கா ரூ. 1000 /-

திண்டுக்கல் காந்திகிராமம் ஃபாத்திமா அலீ ஹாஜி சதக்கா ரூ. 500

திண்டுக்கல் காந்தி கிராமம் **N.** ஜமால் முஹம்மது நிய்யத் ரூ. 2102 /

பெரம்பலூர் விஜயகோபாலபுரம் ஜமாலிய்யா பிரியாணி கடை மறைஞானப் பேழை வளர்ச்சி நிதி ரூ. 1000 /- ம்,

பெரம்பலூர் விஜயகோபாலபுரம் **N.** ஹபீபா **W/O A.** நத்தர்ஷா உடல்நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய மறைஞானப் பேழை வளர்ச்சி நிதி ரூ. 500 /- ம்,

மதுரை யூசுப் அப்பா அவர்களின் தகப்பனார் மர்ஹூம் முஹம்மது பாட்சா அவர்கள் மக்ஃபிரத்துக்கு துஆ செய்ய ரூ.1000/-

எமனேஸ்வரம் மர்ஹூம் **Dr.** சேக்முஹம்மது & சகுபானத்து பஸரிய்யா தம்பதிகளின் மகன் நாபிஹ் பிறந்த நாளை முன்னிட்டு இருஆடுகள் அகீகா கொடுக்க ரூ. 20000 /-ம்,

திண்டுக்கல் எஹ்ஸான் - முஹம்மது காஸீம தங்கள் மகனார் மர்ஹூம். **K.** அப்லஹ் யாஸிர் வருட ஃபாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ.1000/-ம்,

சென்னை சிராஜுத்தீன் உண்டியல் காணிக்கை ரூ.510/-ம்,

திண்டுக்கல் ஹாஜி **J.** முஹம்மது ரஹ்மத்துல்லா, **J.** முஹம்மது சதக்கத்துல்லா ஆகியோரின் மைத்துனர் திண்டுக்கல் **M.** முஹம்மது யாஸீன் தமது தகப்பனார் மர்ஹூம் **A.** முஹம்மது மைதீன் அவர்கள் வஃபாத்தான 30 ஆம் நாள் (2.1.22) குர்ஆன் ஹத்தம் ஓதி மாணவர்கள் உணவுக்கு ரூ.5000/மும், 40 ஆம் நாள் பாத்திஹாவுக்கு ரூ.5000/-மும்,

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு வாப்பா நாயகம் அவர்களின் பொருட்டால் அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை**

**நிறைவேற்றியருள்வானாக! ஆமீன் !**

---

■ *அவர்கள் சுவனத்தில் இருந்து கொண்டு குற்றவாளிகளை நோக்கி உங்களை நரகத்தில் புகுத்தியது எது என்று கேட்பார்கள். அதற்கு (நரகவாசிகள்) நாங்கள் தொழவில்லை; நாங்கள் ஏழைகளுக்கு உணவளிக்கவில்லை. வீண் காரியங்களில் மூழ்கிக் கிடந்தவர்களுடன் நாங்களும் மூழ்கிக் கிடந்தோம். கூலி கொடுக்கும் இந் நாளையும் நாங்கள் பொய்யாக்கினோம். (நாங்கள் மரணித்து) இதனை உறுதியாகக் காணும் வரை (இவ்வாறே இருந்தோம் என்றும் கூறுவார்கள்.*

(அல் குர்ஆன்)

---

வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்து விட்டீர்களா? **மறைஞானப் பேழை சந்தா அனுப்ப வேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**

**Indian Overseas Bank, SB A/c No. 20980100025255.**

**IFSC Code.IOBA 0002098**

**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

# சுன்னத் ஜமாஅத் பேரியக்கம்

கலீபா. ஆலிம் புலவர். எஸ். ஹுஸைன்முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பயீ

*சுன்னத் ஜமாஅத் பேரியக்கம் –இது*
*ஜன்னத் ஜமாஅத் பேரியக்கம்*
*உம்மத்து மார்கள் எல்லோருக்கும் – ஈமான்*
*உயிரோடு திகழ வழி வகுக்கும்.*

*அல்லாஹ்வின் தூதர் இதன் தலைவர் – நான்கு*
*கலீபாக்கள் நான்கு செயலாளர்*
*அருமை சஹாபாக்கள் உறுப்பினர்கள் – நம்*
*அன்னை கதீஜா பொருளாளர்.*

*பத்ரீன்கள் தியாகம் அஸ்திவாரம் – அஹ்ல*
*பைத்தினர் கர்பலா வீர ராகம்*
*பிலால் ரலி முழக்கம் சங்கநாதம் – அண்ணல்*
*சலவாத்து ஓசையே தேச கீதம்.*

*முஃபஸ்ஸிர்கள் பாதை போட்டவர்கள்– எங்கள்*
*முஹத்திஸ்கள் வாகனம் கொடுத்தவர்கள்*
*இமாம்கள் நேர்வழி நடத்துனர்கள் – நல்ல*
*உலமாக்கள் எங்கள் ஓட்டுனர்கள்.*

*உலகெங்கும் உண்டு இதன் கிளைகள் – ஊரில்*
*ஒவ்வொரு பள்ளியும் பாசறைகள்*
*மக்கா மதீனா தலைமையகம் – மூமின்*
*மனங்களே கொள்கை அலுவலகம்.*

*வஹ்ஹாபிஸமே இதன் எதிர்க்கட்சி –போலி*
*தவ்ஹீதும் தப்லீக்கும் பெரும் எதிரி*
*எழுபத்தி ரண்டை நரகனுப்பி – நேரே*
*சுவனம் செல்லும் ஒரே கட்சி.*

*மீலாதும் மௌலூதும் கொண்டாட்டம் –நபி*
*பெருமானார் புகழே சந்தோஷம்*
*கந்தூரி உரூஸ்கள் கலாச்சாரம்– பச்சைப்*
*பிறைக் கொடி ஏற்றுதல் உற்சாகம்.*

*சுன்னத் வல்ஜமாஅத் பேரியக்கம் – இன்று*
*ஜமாலி ஹள்ரத் தளபதியாம்*
*ஜமாலி ஹள்ரத் அணியினிலே – நாம்*
*ஜன்னத்து செல்வோம் முடிவினிலே.*

2.2.2022 புதன்கிழமையன்று சென்னை இராயபுரம் பாரூக் மஹாலில் முனைவர். மௌலவி. அல்ஹாஜ்.எம்.ஷேக்அப்துல்லாஹ் ஜமாலி எம்.ஏ. பிஹெச்டி.ஹள்ரத் அவர்கள் தலைமையில் சுன்னத் வல் ஜமாஅத் பேரியக்கம் சார்பில் நடைபெற்ற சன்மார்க்க சாதனையாளர்களுக்கு விருது – பொற்கிழி வழங்கும் விழாவில் கலீபா ஆலிம் புலவருக்கு விருது– பொற்கிழி வழங்கியபோது வாசித்த கவிதை.

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2021 - 2023
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul


## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)



## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165


Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee